(14)

4

ஆவுடையம்மாள் ஞானப்பாடல்கள்

விளக்கவுரை.

நா.க.சுந்தரம்.

ஓம்

(அருட்சக்தி நாகரா[illegible]ன்.)

"தத்தப்ரஸாதம்" - மாத இதழ் வெளி[illegible] / வை-தொகுப்பு)

1998 - 1993

REPORT ID : BA541P1 DETAILED OPEN ITEM REPORT IN SOURCE CURRENCY
ORGANISATION : 81103 81103 RAC DEL
ACCOUNT-ID : 62986-IN CONTROL ACCT. BSP SALES
PERIOD/YEAR : 04/2000

RUN DATE : 1-08-[illegible]
RUN TIME : 11:39:12

OPEN ITEM-ID	PER/YR	JRNLID	REF 2	REF 3	REF 4	CUR	JE AMOUNT	TOTAL U/I 04/2000	TOTAL ALL PERIODS
4347001310700	04/2000	IJAL81	26072000	+014347001	30998	INR	600,00		
	0000ADMS	BSP BOM 6074138686							
	04/2000	IJAL81	26072000	+014347001	30998	INR	6.828,00-		
	0000ACMS	BSP BOM 8861609							
	04/2000	IJAL81	26072000	+014347001	30998	INR	796.421,00-	802.649,00-	802.649,00-
	0000BSP BOM AGENT TOTAL								
1[illegible]47056300600	04/2000	IJAL70	-000275764	+014347056	83028	INR	30.533,00-		
	0000CYCLE								
	04/2000	IJAL75	18072000	+014347056	30998	INR	40.871,00-		
	0000BSP BOM AGENT TOTAL								
	04/2000	IJAL77	-000277350	+014347056	50028	INR	48.716,00		
	0000CYCLE 0721								
	04/2000	IJAL79	24072000	+014347056	30998	INR	7.845,00-		
	0000 BSP BOM DIFFERENCE NETT								
	04/2000	KP2607	FROM 62997			INR	7.845,00		
	04/2000	QB1506	6296896668/			INR	3.531,00		
	04/2000	QB1506	6296896668/			INR	2.484,00	~~16.673,00-~~	~~16.673,00-~~
47056310700	04/2000	IJAL81	26072000	+014347056	30998	INR	75.202,00-	75.202,00-	75.202,00-
	0000BSP BOM AGENT TOTAL								

1988

Mon. 3

2

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்

(தமிழ்)

விளக்கவுரை

BY

ரா. க. சுந்தரம்.

s/o வெங்கடஸ்வாமிகள்.

Tue. 4

பொருளடக்கம்.

1988

5 Oct.

வரிசை எண்	பாடல்களின் தொகுப்பு
1	வேட்டை கொண்டு வந்த கோனை
2	யாரடா உன்னை அறிந்து பாரடா
3	இந்த வேளை யறியாமல் உன்னை
4	ஸ்வரூபமே நீதானடா
5	மானத்துடனே போடி மாயையே
6	அத்தனை மாத்திரம் மாயை
7	சொல்லப்படாத சுகத்தை
8	சேர்வதும் எப்படியோ
9	எவ்வகை என் அங்கினில்
10	அக்ஞானிகளுக்கு அரியக்காரு
11	பிரமையைத்தூர ஓட்டுவேடா
12	ஞானிகிட்டான் கண்ணே
—	[illegible]

6 Oct.

பக்கம்	சித்தப்ரகாசம் இதழ் வெளியான மாதம் வருடம்	மூலநூலின் பக்கம்.	இதழ்	குறிப்பு.
1	ஜூலை - 1988	87	1	
5	ஆகஸ்டு . 1988	100	2	
20	அக்டோபர் . 1988	101	2	
25	மே . 1989	45	3	
35	அக்டோபர் 1989	110	3	
45	செப்டம்பர் 1990	131	2	
51	நவம்பர் 1990	107	2	
57	அக்டோபர் 1991	120	1	
63	நவம்பர் 1991	94	3	
77	மே 1993	57	1	
81	ஜூலை 1993	134	2	
87	ஆகஸ்ட் 1993		1	
73	ஏப்ரல் 1993			

Thu. 27

ऐं ॐ श्रीः

ஓம் சக்தி ஜெய சக்தி

உ

ஸ்ரீ குருப்யோநம:

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்



(விளக்கவுரை : நாகஸுந்தரம்
S/o அருட்சக்தி நாகராஜன், புது டில்லி)

"தத்தப்ரஸாதம்"
மாத இதழில்
தொடராக வெளியானது.
(ஜூலை 1988 முதல் டிசம்பர் 1993 வரை.)

ஸ்ரீ ஆவுடையம்மாள் ஞானப் பாடல்கள்

'அருட்சக்தி நாகராஜன்'
விளக்கவுரை : நாக. சுந்தரம், S/o அருட்சக்தி நாகராஜன்,
சென்னை - 23.

[ராகம் : ஆனந்த பைரவி]

பல்லவி

கூட்டை கொண்டுவந்த கோனுரை அறியாது
குதிப்பென்னடா குருடா
கட்டி நீ தொட்டு கூட்டை முத்தமிட்டுக் கொள்ளாதேடா
கூட்டை குலைக்க வந்த கோபால கோனுரடா (கூ)

அனுபல்லவி

ஆட்டுக்குட்டி தொண்ணூற்றுறும் பிடித்தடைத்து
ஆகாமியத்தால் வந்த அகங்காரனடா
அன்பாதரவு வைத்து அழைக்காதே மூடா
அத்வைத பாவம் கொண்டு நீயாரென்று பாரடா (கூ)

சரணம்

ஸஞ்சிதம் கொண்டிவன் ஸஞ்சரிக்க வந்தவனடா
சாகிற வரைக்கும் தேடின சொத்தவனைச் சேராதடா
சொந்தம் நமக்கென்று நீயும் சந்தோஷம் கொள்ளாதேடா
கூட்டை உனக்கு சொந்தமாக்கு கூத்துவனோடிப் போவானடா
(கூ)

பிராரப்தங்களினுல் வந்த ஜீவ பிரமை யில்லையோடா
பாவங்கள் அறிந்திருந்தும் பிருந்தியுனக்கு வருவானேடா
பிருந்தியை நீ விட்டாயானுல் இனி பிறப்புனக் கில்லையடா
தாரக பிரம்ம தியானம் யாரென்று பாரடா (கூ)

விளக்கம் : பஞ்ச பூதங்களினுல் ஆனது இந்த உலகம். "ஆகாசாத் வாயு" என்னும் ச்ருதிப்படி ஆகாயம் முதலாக வந்தது, மற்ற நான்கு பூதங்களும் எங்கும் பரந்து நிற்கும் பரம்பொருள்-எங்கும் பரந்து நிற்கும் ஆகாயத்தை முதலாக வைத்து பஞ்சபூதக் கூட்டை உருவாக்கியது.

பரம்பொருளின் இச்சையினுல் பாரிலே வந்த ஜீவன் - பஞ்ச பூதமென்னும் கூட்டிலே அகப்பட்டு பஞ்சேந்திரியக் கூட்டான

உடலில் புகுந்துகொள்கிறான். கயிற்றைப் பாம்பெனக் கண்டு குதிக்கிறான். இந்த உலகின் கோன் யார்? என (கோன் + யார் = கோனார், தலைவன், அரசன் - யார்) அறியாது மாயையினால் மயங்குகிறான்.

காலையில் அவிழ்த்துவிடப்பட்ட பசுக்கூட்டங்கள் நாள் முழுவதும் மேய்ந்து விட்டு மாலையில் வீடு திரும்புகின்றன. கோபாலர்கள், கோனார்கள் அதனை ஓட்டிச்சென்று மேய்த்து வருவார்கள் என்பது தெரிந்த ஒன்றே. இதனைப்போலவே ஜீவர்களாகிய பசுக்களை உலகில் மேயவிட்டு பின்பு தன்னுடனேயே லயமாகச் செய்துவிடுகிறது பரம்பொருள். இப்படியான கோபாலக் கோனாரை அறியாது ஜீவனே நீ ஏன் இப்படி குதிக்கிறாய் என்று கேட்கிறாள் இந்த அம்மாள்.

பரம்பொருள் பஞ்சபூதக்கூட்டை உருவாக்க அதிலிருந்து பஞ்சேந்திரியக் கூட்டு வர, அதிலிருந்து தத்துவங்களாகிய கூடு தோன்றுகிறது.

ஆட்டு மந்தைகள் செல்லும்போது முதல் ஆடு எப்படிச் செல்லுகிறதோ அதனைப் பின்பற்றியே மற்ற ஆடுகள் செல்லும். அப்படி இந்த தத்துவக் கூட்டங்களும் ஒன்றன்பின் ஒன்றாய்ச் செல்லும் சுபாவம் படைத்தது. அப்படி இந்த ஆட்டுக்குட்டிகளாகிய தத்துவங்கள் 96ம் அடைபட்டுள்ளன என்கிறாள் இந்த அம்மாள். இவைகள் "ஆகாமியம்" என்ற வினைக்குப்பையை நோக்கிச் செல்லுகின்றன. இத்தகைய வினைகளை நீ அன்பாதரவு வைத்து அழைக்காதே. அப்படி அழைத்தால் நீ மூடன்தான் என்று கூறும் அவள் அத்வைத பாவம் கொண்டு உன்னை நீ தெரிந்துகொள் என்கிறாள். அத்வைத பாவம் வந்தவுடனே ஆகாமியம் என்னும் வினைத்தோற்றம் மறைந்து விடுகிறதல்லவா!

"இப்படியே நான் பிரம்மம் என்று ஆனவுடன் நூறுகோடி கல்பகாலங்களிலே சேர்த்து வைக்கப்பட்ட ஸஞ்சிதம் என்னும் வினைத்தோற்றமும் விழிப்பினால் கனவில் செய்தது அழிவதுபோல அழிகிறது" என்று ஸ்ரீ பகவத்பாதர்கள் விவேகசூடாமணியில் கீழ்க்கண்ட சுலோகத்தில் கூறுகிறார்கள்.

"அஹம் ப்ரம்மேதி விக்ஞானாத்
கல்பகோடி சதார்ஜ்ஜிதம் ।
ஸஞ்சிதம் விலயம் யாதி ப்ரபோதாத்
ஸ்வப்ன கர்மவத ॥"

இந்தப் பாடலில் ஸ்ரீ ஆவுடையம்மாள் ஆகாமியம், ஸஞ்சிதம், பிராரப்தம் என்ற மூவ்வினைத் தோற்றங்களையும் விளக்குகிருள்.

"பிராரப்த ஸஞ்சித ஆகாமியங்கள் எல்லாம் உன் மனத் தோற்றம்தான். நீ அவற்றை உண்மை என்றெண்ணி மதி மயங்காதே" என்று கூறும் அம்மாள்,

"ப்ராரப்தம் பலவத் தரம் கலுவிதாம் போகேன தஸ்ய க்ஷய:।
ஸம்யக்ஞான ஹுதாசனேன விலய: ப்ராக் ஸஞ்சிதாகாமினும்

என்னும் சங்கரரது வாக்கைத் தழுவி —

"அத்வைத பாவம்கொண்டு நீ யாரென்று பாரடா
கூட்டை உனக்கு சொந்தமாக்கு ;
கூத்துவன் ஓடிப்போவானடா
பிருந்தியை நீ விட்டாயானுல் இனி
பிறப்பு உனக்கில்லையடா"

என்று மயக்கம் நீங்குவதற்கான வழியையும் கூறுகிருள்.

தெளிந்த ஞானத் தீயால் ஸஞ்சித ஆகாமியங்களுக்கு அழிவாம். எனவே முக்தனுன ஞானிக்கு இவை இல்லை. இவை மறைய - ப்ராரப்தம் மட்டும் உண்டோவெனில் அதுவும் இல்லை. ப்ராரப்தத்தின் அழிவு அல்லது மறைவு கேவல அனுபவத்தால் என்று சொல்லுகிறபோது ஞானிகளும் ப்ராரப்தத்தை அனுபவித்துத்தானே ஆகவேண்டும் என்ருகிறது. ஆனுல் அவ்வாறு இல்லை.

பழுதையில் பாம்பைக் கண்டவர்கள் அல்லவா அதற்கு பயப்படுகிருர்கள். ஞானிகள் பழுதையென உண்மையை உணர்ந்தவர்களாதலால் அவர்களுக்கு ஸஞ்சித ஆகாமியங்கள் போன்று ப்ராரப்த கர்மாும் இல்லையாம். இதற்கு கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் தன்னுடைய "சுவாநுபூதி ரஸாயனத்தில்" உதாரணம் சொல்லி விளக்கியுள்ளார்கள்.

3 ஸ்திரீகள் ஒரு புருஷனுக்கு தாரங்கள். அந்த புருஷன் மறித்தவுடன் அதில் இருவர் அமங்கலிகளாகவும் ஒருவர் சுமங்கலியாயும் இருக்கிருர்கள் என்று கூறுவது எப்படி பொருத்தமில்லையோ அப்படியே ஒரு ஜீவனைப் பற்றிய 3 கன்மங்களில் அச்ஜீவதசை

நீங்கினபின் இரண்டு கன்மங்களும் நீங்கின என்றும் ப்ராரப்தம் மட்டும் உண்டென்றும் சொல்வது கூடாது என்று சொல்கிறார்கள்.

இத்தகைய பாவம் நீ கொண்டிருந்தும் உனக்கு ஏன் மயக்கம் வருகிறது ? செத்துச் செத்துப் பிறந்து பிறந்து சேர்த்துவைத்துக் கொண்டிருக்கிற வினைத்தோற்றம் என்கிற பிராந்தியை நீ விட்டாயானால் உன்னை நீயே யார் என்று உணர்ந்துகொள்வாய் என்று கூறுகிறார். மேலும் கனவில் கொட்டின தேள் விழித்துக் கொண்டவுடன் எப்படி கடுக்காதோ அப்படி நீ உன்னை உணர்ந்த வுடன் இந்தப் பொய்த்தோற்றம் மறைந்துவிடுகிறது என்கிறார்.

தாரக ப்ரம்மம் என்ற தியானத்தை அதாவது “ அஹம் ப்ரம்மாஸ்மி ” என்ற உணர்வை ஸத்குருவால் அடைய வேண்டும் என்று அறுதியிட்டு இந்தப் பாடலை முடிக்கிறாள்.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையக்காள் ஞானப்பாடல்கள்

விளக்கவுரை: நாக. சுந்தரம்

(S/o அருட்சக்தி நாகராஜன்)

ராகம் - ஸாவேரி] [பாடல் : 2

பல்லவி

யாரடா உன்னை யறிந்துபாரடா பரமாத்மா என்று
தேரடா தேர்ந்தால் உனக்கெதிர் யாரடா (யா)

அநுபல்லவி

ஸ்தூல ஸூக்ஷ்ம காரணனடா நீ
துரீயமான பொருள் தானேடா
ஆறு விகாரங்கள் தானேடா நீ
அருமையாகி நின்ற அறிவுதா னேடா (யா)

சரணம்

போக்கு வரத்துடல் தானேடா நீ
பூரணமாகி நின்ற பொருள் தானேடா
சேர்க்கும் நாமரூபம் தானேடா
சேதனமாய் நின்ற சிவன் தானேடா (யா)

தோன்று மவஸ்தைகள் தானேடா நீ
தொடர்ந்து வந்த ஞான துறை யோடா
மூன்று விருத்திகள் தானேடா நீ
ஸுஷும்னை சக்தி தானேடா (யா)

கருவிகரணங்கள் தானேடா நீ
அத்தைக் கண்டறிந்த ஞானக் கண்ணேடா
காலம் மூன்றும் கழிந்தவனேடா நீ
காரணமாய் நின்ற கருத்து தானேடா (யா)

மாறிவரும் உடல் தானேடா நீ
மாசில்லாத வான் மதியோடா
குறியும் குணமும் தானேடா நீ
குரு வெங்கடேசுவரர் தானேடா (யா)

விவேகாநந்தர் ஒருசமயம் ஒரு கதை சொன்னார். இந்திரன் ஒரு காலத்தில் பன்றியாக ஆனான். அப்போது அவன் தனது பெண் பன்றியுடனும், குட்டிப் பரிவாரங்களுடனும் - சாக்கடையிலும், சகதியிலும் சஞ்சரித்து சந்தோஷமாக இருந்துவந்தான். தேவர்கள் இந்திரனின் இந்த நிலையைக் கண்டு மனம் நொந்து அந்தப் பன்றியிடம் சொன்னார்கள்: "ஓ பன்றியே! நீர் இந்திரனாக இருந்தவர். தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருந்த நீர் பன்றியாக ஏன் உழலுகின்றீர்?" அதற்கு இந்திரனான பன்றி சொன்னது: "நான் இந்த பன்றி ரூபமாகவே இருக்கின்றேன். இந்த நிலை எனக்கு சுகமாக இருக்கின்றது. எனக்கு தேவலோகம் வேண்டாம்."

இதைக் கேட்ட தேவர்கள், "தேவலோகத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்த இந்திரன் இவ்விதம் ஆகிவிட்டாரே" என வருந்தி ஒரு முடிவு செய்தார்கள். அதன்படி இந்திரனாயிருந்த அந்தப் பன்றியின் குட்டிகளை ஒவ்வொன்றாகக் கொல்லத் தொடங்கினார்கள். முடிவில் பெண் பன்றியையும் கொன்றார்கள்.

தனது குட்டிகளும், தன் இணையான பெட்டைப் பன்றியும் கொல்லப்பட்ட பின்பு அந்தப் பன்றியானது மிகவும் துக்கமுற்று கதறி அழுதுகொண்டிருந்தது. உடனே தேவர்கள் அப்பன்றி சரீரத்தை வெட்டிப் பிளந்தார்கள். அதனின்று திடீரென்று இந்திரன் வெளிப்பட்டு, "இது என்ன கனவு?" என்று கூறி விட்டுச் சிரித்தான்.

இதேபோன்றுதான் நாமும் நம்முடைய சுயநிலையை மறந்து ஸம்ஸாரமாகிய சாக்கடைக் குழியில் விழுந்து, உழன்று கொண்டிருக்கிறோம்.

இந்திரன் தனது சுயநிலையை விட்டு இறங்கிய தனால்தான் வஜ்ராயுதம் என்ற உயர்ந்த ஆயுதத்தைப் பெற்ற அவனை, மற்ற தேவர்களால் வெட்டிப் பிளக்க முடிந்தது.

இதைத்தான் ஆவுடையம்மாள் "நீ உன்னை பரமாத்மா என்று அறிந்துகொண்டுவிட்டால் உன்னை யாராலும் வெல்ல முடியாது" என்று கூறுகிறாள் பல்லவியில்.

"நான்தான் பரமாத்மா" என்பதை எப்படி அறிவது? அறிந்தபின் எப்படி பரமாத்மாவாகவே ஆவது? என்றால் முதலில் விசாரம் செய்யவேணும். இதனை விவரிக்கிறாள் அனுபல்லவியில்.

இந்திரன் தன்னை மறந்ததற்கு முதற்காரணம் அவனுடைய பன்றி சரீரமல்லவா! முதலில் அந்த சரீரத்தைப் பற்றிய விசாரம் செய்யவேணுமே!

சரீரம் மூன்று வகை அல்லவா!

ஸ்தூல, சூக்ஷ்ம, காரணம் என விரிவாகிறது.

இதில் ஸ்தூல சரீரம் என்பது பஞ்சபூதங்களாலானது. கண்ணால் காணக்கூடியது. முதலில் இந்த சரீரம் நானா? என்று சிந்திக்கவேண்டும்.

உதாரணமாக ஒரு ரேடியோ நமது வீட்டில் இருக்கிறது. அப்போது ஒரு நண்பர் ''இது யாருடைய ரேடியோ?'' என்று கேட்கிறார். உடனே நாம் ''இது என்னுடைய ரேடியோ'' என்கிறோம்.

நம்மை விட்டு எது வெளியில் அன்னியமாக பிரிந்திருக்கிறதோ அதாவது நாமும் அதுவும் வேறு வேறாக இருந்தால் தான் அது என்னுடையது என்று கூறுவோம்.

அதேபோல்தான் நாமும் இந்த உடலும். எப்படியெனில் உடலை நாம் ''என்னுடைய உடல்'' என்று கூறுகிறோம். ''என்னுடைய உடல்நிலை'' சரியில்லை என்றெல்லாம் கூறுகிறோம். இதனால் உடலும் நாமும் வேறு என்று தெரிகிறது. அப்படியானால் இப்படியெல்லாம் சிந்தித்து அறிவது யார்? என்றால் அது நமது பிராணனும், மனமும், பத்து இந்திரியங்களுமே! இவை சேர்ந்ததுதான் சூக்ஷ்ம சரீரம்.

ரேடியோவின் உள்ளே பல பொருட்கள் இருக்கின்றன.

அந்தப் பொருட்களையெல்லாம் மூடியிருக்கும் கவர் போன்றதுதான் ஸ்தூல சரீரம்.

ரேடியோவின் உள்ளே இருக்கும் (Machinery) போன்றது தான் சூக்ஷ்ம சரீரம்.

ஒரு ஜீவன் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களை ஒவ்வொரு ஜன்மத்திலும் பெறுகிறான். இதற்குக் காரணமாக அமைவது ப்ராரப்தம். இப்படி ஜன்ம ஜன்மமாக சூழ்ந்துவந்த வினைகளின் மீதி ஜீவனை சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இதைத்தான் காரண சரீரம் என்பர்.

எப்படி ரேடியோ இயங்க மூலகாரணமாக ஒரு சக்தி (பாட்டரி அல்லது மின்சாரம்) இருக்கிறதோ அதேபோல இந்த மூன்று சரீரங்கள் சேர்ந்த கூட்டையும் ஒரு சக்தி இயக்க வேண்டுமல்லவா?

அந்த சக்திதான் "ஆத்மா" என்பது.

ஒவ்வொரு ரேடியோவிற்கும் தனித் தனியான, வேறு வகையான, மாறுபட்ட, மின்சாரமா வருகிறது? இல்லை அல்லவா?

அதேபோல்தான் ஒவ்வொரு சரீரத்திற்குள்ளும் உறைந்து இயக்கும் ஆத்மா வேறு வேறு என நாம் நினைத்தாலும் அந்த ஆத்மா எங்கும் நிறைந்த ஒன்றுதான்.

நமக்கு வைத்துள்ள பெயர்களெல்லாம் நமது உடலுக்கே தவிர ஆத்மாவிற்கல்ல.

இதைத்தான் பகவான் கீதையில்,

"ந ஹன்யதே ஹன்யமானே சரீரே"

என்று கூறுகிறார்.

நினைவு, கனவு, ஆழ் உறக்கமெனும் மூன்று நிலைகளையும் கடந்து எவன் இந்த ஆத்மாவை உணர்கிருனே அவனுக்கு துரியன் என்று பெயர். (துர்யா – லலிதா ஸஹஸ்ரநாமம்)

இவ்வாறெல்லாம் அறியவிடாமல் தடுப்பவை காம, க்ரோத, லோப, மோக, மத. மாத்சர்யம் என்னும் ஆறு விகாரங்களாகும்.

ரேடியோ அழிந்தாலும் மின்சாரம் அழிவதில்லையல்லவா? அதேபோல குணத்தோடு கூடிய காயம் அழிந்தாலும் ஆத்மா அழிவதில்லை.

"இந்த ஆறு விகாரங்களுக்கெல்லம் அப்பாற்பட்டவன் தான் என்ற பாவனை திடப்பட்டால் நீ பரமாத்மா என்பதை உணர்வாய்" என்று கூறும் ஆவுடையம்மாள், "இப்படியெல்லாம் அறியப்படும் அறிவாக நீ இருக்கிருயா?" என்று கேட்கிருள்.

ज्ञानामृतं समरसं गगनोपमोऽहम् ।

என்று அவதூதகீதையில் தத்தாத்ரேயர் கூறும் நிலை வந்து விடின் போக்குவரத்து போன்று வயிற்றிற்கும், விறகிற்கும்

விரைந்து விரைந்து சென்றுகொண்டிருக்கும் உடல் நானல்ல என்ற பாவனை ஏற்பட்டு 'பூரணமாகி நின்ற பொருள்தான் நான்'' என்பதான உணர்வு ஏற்பட்டுவிடும்.

இந்த உணர்வு ஏற்பட்டால் நாம ரூபத்தோடு கூடிய சேதனமாகி நின்ற ஜீவ சிவன் அஸ்தி, பாதி, ப்ரியத்தோடு (நாம, ரூபம் நீங்கி) கூடிய பரசிவனாவான்.

இந்த நிலை எப்படிப்பட்டது என்பதை தாயுமான ஸ்வாமிகளும்,

''நானெனை நிற்கு ஞான
    ஞான மன்றந்த ஞானம்
மோனமா யிருக்க வொட்டா
    மோன மின்ருகவே தான்
தேனென ருசிக்குமன் பாற்
    சிந்தை நைந்துருகும் வண்ணம்
வானென நிறைந் தானந்த
    மாகடல் வளைவ தின்றே''

என்று விளக்குகிறார்.

(தொடரும்)

ௐ

PRANAMS TO
SRILASRI AVADHUTA
KRISHNANANDA BRAHMENDRA
SWAMIGAL OF SENDAMANGALAM.

PRANAMS TO ALL ATMAN.

WITH COURTESY FROM :

'A. JEEVATMAN'

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை-23.

2-ஆவது பாடல் தொடர்ச்சி

மேலும் துரீய பொருளை விளக்க வந்த தாயுமான சுவாமிகள்,

" தெரிவரிய பூரணமாய் ... ...
... ...
துரீய நடுவூடிருந்த பெரிய பொருள் "

என்று கூறுகிறார். மேலும், என் வினையும், பிறப்பும் அனந்தமாயிருக்க, நீயோ அனந்த — ஆனந்தமான பெரிய பொருள் ; " துரீய வடிவு " என்கிறார், பின்வரும் பாடலில்.

ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்றும்
உறவனந்தம் வினையினால்
உடலனந்தஞ் செயும் வினையனந்தங் கருத்தோ
அனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ் சொர்க்க நரகமும் அனந்தநற்
தெய்வமும் அனந்த பேதந்
திகழ்கின்ற சமயமும் அனந்த மதனால் ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரனந்தங் கோடி வருஷித்ததெனை அன்பர்
கண்ணும் விண்ணுந் தேக்கவே
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலைநங்
கடவுளைத் ," துரிய வடிவை "ப்
பேரனந்தம் பேசி மறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தமாம்
பெரிய பொருளைப் பணிகுவாம்.

அப்படிப்பட்ட நிலை வந்தவுடன் உடலால் ஒரு பயனுமில்லை என்பதைத்தான் தனிப் பாடலும்,

''வெங்காயஞ் சுக்கானால் வெந்தயத்தா லாவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே''

என்றது.

அத்தகைய சீரகத்தைப் பெற்று ஞானத்துறையில் நிலைத்து நிற்கின்ற போது, விழிப்பு, கனவு, ஆழ் உறக்கம் என்ற விருத்திகள் பாதிப்பதில்லை. இதனால் அகண்டாகார விருத்தி ஏற்பட்டு ஸுஷும்னையின் சக்தியினால் ஆழ் உறக்கத்தையும் கடந்த துரீய நிலையில் '' பேசரும் அனந்த பத ஞான ஆனந்த மாகிய பெரிய பொருளாகவே '' மாறிவிடுகிறான் ஜீவன்.

இப்படியெல்லாம் கூறி வருகின்ற ஸ்ரீ ஆவுடையம்மாள் கடைசியில்,

'' நீ குரு வெங்கடேசுவரர் தானேடா '' என்று கேட்கிறாள்.

முதலில் ' தான் யார் ' என அறியாது குருவினிடம் செல்லும் ஜீவன் குருவினால் ஸ்வரூப நிருபணத்தை அறிந்து, தன்னிடம் பிரகாசிக்கும் பொருள் எது என்பதையும் அறிகிறான். அறிந்த பின் அந்த பிரகாசமும் தானும் ஒன்றாகவே இருப்பதை உணர்கிறான்.

ஏகலைவன் என்ன செய்தான் ?

துரோணாசாரியாரைப் போன்ற ஒரு சிலையின் முன் நின்று வில் வித்தை பயில்கிறான். ஆனால் அர்ஜுனனுக்கோ துரோணர் கூட இருந்து அக்கரையுடன் பயிற்றுவித்தார். அப்படிப் பயின்ற அர்ஜுனனை விட ஏகலைவன் சிறந்த வில் வீரனாக ஆகிறான். ஏனெனில் ஏகலைவனுக்குள் முன்பே அந்த ஆற்றல் இருந்தது. ஆனால் அந்த ஆற்றலை வெளிக்கொணர ஒரு ஸ்தூலமான பொருள் அவனுக்குத் தேவைப்பட்டது. அந்த ஆற்றலை அவன் உணர்ந்தவுடன், '' இந்த ஆற்றல் எங்கிருந்தோ வந்ததல்ல ; என்னுள் இருந்துதான் வந்தது '' என அறிகிறான். இந்த பிரகாசமான ஆற்றல் தன்னுள் மட்டும் அல்ல ; எங்கும் நிறைந்து உள்ளது ; தன் பகைவனிடத்தும் அந்த ஆற்றல்மிகு ஆத்மா தான் உள்ளது ; நண்பனிடத்தும் அதுதான் ; குருவினிடத்தும் அது தான் ; சிஷ்யனிடத்தும் அதுவே தான் என்பதை அவன் உணர்கிறான்.

'' அங்குஷ்டமாத்ரமாகவும் அதே சமயத்தில் அகிலம் முழுவதுமாகவும் விளங்கும் பரம்பொருள் தான்தான் '' என்பதை உணர்ந்த அவன் அதனை வெளிக்காட்டும் முகமாக தனது கட்டை விரலை – தன்னையே – தனது குருவிடம் அர்ப்பணித்துவிடுகிறான். கட்டை விரலை அளித்ததனால் அவனிடம் உள்ள வில் ஆற்றல் அழிந்துவிடவில்லை. ஏனெனில்,

'' பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதஸ்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ணமேவாவ சிஷ்யதே ''

என்பது ச்ருதியல்லவா ?

அதன்படி அவனும் குருவும் ஒன்றாகவே ஆகிவிடுகிறார்கள்.

இதை எண்ணியே ஆவுடையம்மாளும் '' நீ குரு வெங்கடேசுவரரார் தானோடா '' என்று கேட்டு இந்தப் பாடலை நிறைவு செய்கிறாள்.

(தொடரும்)

[பெண்ணே! சமாசாரம் தெரியுமா? மாடு மேய்க்கும் கோபாலனின் (இடையனின்) தங்கை (பார்வதி) தான் அங்கயற் கண்ணியாகத் தோன்றிய மதுரை மாநகரை விட்டு தில்லையில் ஆடல்புரியும் நடராஜனின் மனைவியாக (சிவ–காமியாக) ஆனாள். சிறிய இடையை உடைய அவள் (சிற்றிடைச்சி–கடைப்பட்ட இடையர் குலம்) தட பட எனக் குட்டிக்கொண்டு வணங்குவதற்கு ஒரு கோட்டானையும் (ஒரு கொம்பை உடைய யானைமுகக் கடவுளையும்) பெற்றாள்.]

சிவபெருமான் ஏன் விஷத்தைச் சாப்பிட்டார்?

வள்ளல் எனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையுமே இருக்கத் —
தெள்ளுமையாள்
அஞ்சல் அஞ்சல் என்று தினம் அண்டையிலே
தானிருக்க
நஞ்சுதனை ஏன் அருந்தினார்?

(காளமேகம்)

[சிவபெருமானுக்குப் பணக்கஷ்டமுண்டோ? வெள்ளி மலை (கைலாசம்), பொன்மலை (மேரு) இரண்டும் அவருக்குச் சொந்தம். மனைவியும் சாதாரணமானவள் அல்ல. தேகத்துடன் பாதியாகவே ஒட்டிக்கொண்டவள். இப்படி இருக்க அவருக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? பிழைக்க வழி இல்லாதவனைப்போல் விஷத்தை என் சாப்பிட்டார்?]

'கரி' என்று ஆரம்பித்து 'உமி' என்று முடியும் பாடல்.

கரியதனை உரித்த கையா! வனைஎந்து
அரிஅயற்கு எட்டாத ஐயா! — பரிவாக
அண்டர் எல்லாம்கூடி அமுதம் கடைந்தபொழுது
உண்ட நஞ்சை இங்கே உமி.

(காளமேகம்)

[யாகத்தில் வெளிப்பட்ட யானையை உரித்துப் போர்த்துக் கொண்ட கையை உடையவனே! சங்கையுடைய திருமாலுக்கும் நான்முகனுக்கும் அடியும் முடியும் காண இயலாதவனே! தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி திருப்பாற் கடலில் அமுதம் கடையும்போது, நீ உயிர்களிடத்தில் கொண்ட இரக்கத்தால் உண்ட விஷத்தை இங்கே உமி – துப்பிவிடு.]

வேடிக்கையான வேதாந்தப் பாடல்கள்

(தொகுப்பு : S. V. ரெங்கநாதன்)

எவ்வுயிரும் காக்க ஒரு ஈசன் உண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யான் ஒருவன் அல்லனோ — வவ்வி
அருகுவது கொண்டிங்கு அலைவதேன்? அன்னே
வருகுவது தானே வரும்.

(திருவள்ளுவர்)

[தாயே! எல்லா உயிர்களையும் காப்பதற்கு ஒரு இறைவன் இருக்கின்றார் அல்லவா? அந்த ஈஸ்வரனால் காக்கப்படும் உயிர்களில் நானும் ஒருவன்தானே! அழியும் பொருளைக் கையில் எடுத்து அலைவதால் என்ன பயன்? விதிப்படி நடக்கக்கூடியது நாம் அதைப்பற்றி எண்ணாமலே நடைபெற்றுவிடும்.]

௸ ௸ ௸ ௸

பயனற்றவை

மாடுஇல்லான் வாழ்வும் மதிஇல்லான் வாணிபம்நல்
நாடுஇல்லான் செங்கோல் நடாத்துவதும் — கூறும்
குருஇல்லா வித்தை குணம்இல்லாப் பெண்டு
விருந்தில்லான் வீடும் விழல்.

(ஒளவையார்)

[செல்வமற்றவன் வாழ்வும், அறிவற்றவன் செய்யும் வியாபாரமும், நல்ல நாட்டைப்பெருதவன் செங்கோல் ஆட்சியை நடத்துவதும், அறிவு கூடுவதற்குக் காரணமான குருவிடம் பெருத கல்வியும், நற்பண்பு இல்லாத மனைவியும், விருந்தினரை உபசரிக்காத இல்லறமும் பயனற்றவையாகும்.]

௸ ௸ ௸ ௸

விநாயகரைப் பெற்றவள் யார்?

மாட்டுக் கோன்தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக் கோனுக்கும் பெண்டாயினள் — கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணி சிற்றிடைச்சி காண்.

(காளமேகம்)

திருப்பதியில் ஒரு பிள்ளையார்? ஏன் அவர் திருப்பதி மலைக்குப் போய் உட்கார்ந்திருக்கிறார்?

தந்தை பிறந்திறவாத் தன்மையினால் தன் மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினால் – முந்தொருநாள்
வினிக்கு வேளையெரித்தான் மகன் மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

(காளமேகம்)

[முன்பு வீண் பெருமை கொண்ட கருப்பு வில்லையுடைய மன்மதனை எரித்த சிவபிரானின் மகனாகிய விநாயகர், தந்தைக்குப் பிறப்பு இறப்பு கிடையாத தன்மையினால், அவருக்கு வாரிசாக வர முடியாது என்று கருதி, தன் மாமன் திருமால் 10 முறை பிறந்திருக்கும் தன்மையுடையவனாதலால், மாமன் சொத்துக்காகத் திருப்பதியில் வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.]

சிவபிரான் பிணி தீர்க்கும் வைத்தியர் தானா?

வாதக்காலாம் தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிறாம் பிள்ளைதனக்கு — ஓதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேறொரார்
எந்தவினை தீர்ப்பார் இவர்?

(காளமேகம்)

[சிவபெருமானுக்கு வாதக்கால் (காற்றே திருவடிகள்), மைத்துனர் மஹாவிஷ்ணுவுக்கோ நீரிழிவு (நீராகிய கடலில் சயனம் தொழில்), மூத்த பிள்ளை விநாயகருக்கு மஹோதரம் (வயிறு வீக்கம்), இப்படித் தன் குடும்பத்திலுள்ளவர்களுக்கே நோயைப் போக்கடிக்க வழியறியாத அவர், வேறு எந்த வினையைத் தீர்க்கும் வைத்யநாதர்?]

பார்வதி மணம் செய்துகொள்ளும் யோக்யதை இருக்கிறதா பரமசிவனுக்கு?

தீத்தான் உன் கண்ணிலே தீத்தான் உன் கையிலே
தீத்தானும் உன்றன் சிரிப்பிலே — தீத்தானுன்
மெய்யெல்லாம் புள்ளிருக்கு வேளூரா உன்னை இந்தத்
தையலாள் எப்படிச் சேர்ந்தாள்?

(காளமேகம்)

[சூரிய சந்திரர்கள் கண்கள். கையில் அக்னிப்பிழம்பு. நீ சிரித்தாய், மன்மதன் பஸ்மமாகிவிட்டான். இப்படி உன்

தேகமெல்லாம் நெருப்பாய் இருக்கும். எப்படி அம்பிகை உம்மைப் பதியாக வரித்தாள் ?]

பரமசிவனும் மஹாவிஷ்ணுவும் வெவ்வேறு?

மதுரைச் சொக்கநாதருக்கு மஹாவிஷ்ணு அயலானவரா? இல்லை. காரணம்!

கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்தான் வேறோ
இடம்பெரிய கண்ணொன்றை ஈந்தான் — உடம்பதனிற்
செம்பாதி யானான் சுமக்க எருதானான்
அம்பானான் தேவியு மானான்.

(காளமேகம்)

[திருமால் தன் ஒரு கண்ணைத் தோண்டி சிவபிரானுக்குக் கொடுத்தார். உடலில் ஒரு பாதியானார் (ஹரிஹரன் — சங்கர நாராயணர்). அவரைச் சுமக்கும் வ்ருஷபமானார். த்ரிபுர சம்ஹாரத்தில் அம்பு ஆனார். ஐயப்பனைப் பெற்றளிக்க மனைவியும் ஆனார்.]

கைலாசத்தில் நாத்தனார் மதனி சண்டை கூட உண்டு.

பார்வதியைப் பார்க்க லக்ஷ்மி வருகிறாள். சம்பாஷணையைப் பாருங்கள்.

பார்வதி : (தன் வறுமையைப் புலப்படுத்த) தாமரையில் வாழ்பவளே! சிவன் பிச்சை எடுத்து வந்த சோறு இவ்வளவுதான் இன்று.

லக்ஷ்மி : என் நிலை இன்னும் மோசமாயிற்றே. நான் மண்ணைத்தான் உணவாகப் பார்த்தேன். (திருமால் மண்ணைச் சாப்பிட்ட வருத்தம் லக்ஷ்மிக்கு)

பார்வதி : சிவனுக்கு ஒரு எருதுதானே இருக்கிறது.

லக்ஷ்மி : நீ தேவலையே! எங்களவர் மாடு மேய்க்கும் கோனாராக இருந்தாரேயல்லாமல், ஒரு மாடு வாங்கிக் கட்டவக்கில்லையே ?

பார்வதி : கட்டிய மனைவியிருக்க பரவையாருக்கு தூது போலாமா ? அது என்ன prestige ?

லக்ஷ்மி : எங்களவர் தூது போனது மஹாபாரதமாயிற்றே !

 19

பார்வதி : திருநீலகண்டர் தம்மிடம் ஒப்படைத்த ஓட்டைத் திருடலாமா ?

லக்ஷ்மி : எங்களவர் திருடினதற்கு உரலில் கட்டிப் போட்டு அடித்தார்களே!

பார்வதி : கிருஹஸ்தரா லக்ஷணமா இல்லாம எல்லார் முன்னிலேயிலும் என்ன நடனம் வேண்டிக்கிடக்கு ?

லக்ஷ்மி : எங்களவரும் நாட்டியப் புலி என்பதை உங்களவர் அரவத்தைக் கேள் !

பார்வதி : விஷத்தை எப்படித்தான் சாப்பிட்டாரோ ?

லக்ஷ்மி : எங்களவர் மண்ணைத் தின்ற செய்தி நான் முன்பே கூறவில்லையா ?

"கவுரி கமலாய் அரன்இரந்த சோறு இதுவெனக்
கமலே மண்கண் டேனெனக்

காளையொன்றே அரற்கென மாடு மேய்த்ததைக்
கட்டிடை யனுரோ எனச்

சிவனொருவர் நூதென்ன அத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரத மென்ன

சேரோடு திருடினன் அரனெனக் கட்டுண்ட
செய்தி நாம்அறி வோமென

அவையில் நடமாடினு ரென்ன அவ்வாடல்
அரவ மறியா தோவென

ஆலமதை யுண்டனன் அரனென்ன மண்ணுண்ட
அதனை யறியோ மோவென

விவரமொடு மலைமகளும் மலர்மகளு மிவ்வாறு
விளையாடு மிவர்கள் துணையாம்

மேவிவரு புத்திர மித்திர களத்திரருடன்
மேன்மேலும் மிக வாழியே".

(சிவப்ரகாச ஸ்வாமிகள்)

என்று இங்ஙனம பேசி விளையாடும் மலைமகளும், மலர்மகளும் நாம், நல்மக்கள், நல்ல நண்பர்கள், நல்ல அனுகூலமான சம்சாரத்துடன் வாழ அருளட்டும்.

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் — 3

ராகம் : மத்தியமாவதி

பல்லவி

இந்தவேளை யறியாமலுன்னை எந்தவேளை யறிவாய் (இந்த)

அனுபல்லவி

அந்தமாகிய மனுஷ்ய ஜன்ம மறிதல்லவோ
கிடைப்பது ஐயையோ (இந்த)

சரணம்

1. சாஸ்திரம் பலகோடி யிருக்கிறது ;
ஸாதனம் நன்ருய் நாலிருக்கிறது
நேத்திராதி கரண முண்டடா ;
வெகு நேர்த்தியான விவேக முண்டடா (இந்த)

2. பாத்திரம் தீப ரூபமடா
பாருக்குள் பெரியோருண்டடா
ஸூத்திரதாரி போலிருக்குதே (யுந்தன்)
ஸ்வரூபமாம் பிரதி மறைக்குதே (இந்த)

3. காரண காரியங்கள் தோன்றுதே
காயமும் வேருக காணுதே
ஆரணம் பொய் சொல்லாதடா
ஆத்மா நீ தானுமடா (இந்த)

4. பூரணமாய் பொங்குதே
போகலாத ஜென்மம் நீங்குதே
தரணி எல்லாம் தயங்குதே
தன்னைய றியாதே மயங்குதே (இந்த)

5. ஓடமிருக்கிற போது வேணும்
உடலுக்கு காலன் வாதுதான்
பாடாமல் பாடுதடா நூல்
பாரடா முக்தி கூடுதடா (இந்த)

6. மூட புத்தியை துரத்தடா
ஜீவன் முக்தி வழி மனம் நிறுத்தடா
கூடஸ்தராம் ஈசன் சிரிக்கிறார்
எங்கள்குரு வெங்கடேசுவரர் இருக்கிறார் (இந்த)

ஸ்ரீ ஆவுடையம்மாள் இந்தப் பாடலில் மனிதப் பிறவியின் முக்கியத்துவத்தையும், மனிதனுக்கு முக்தி அடையக் கிடைத்த ஸாதனங்களைப் பற்றியும் விளக்குகிறாள்.

'' அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது '' என்றாள் ஔவைப் பாட்டி.

ஸ்ரீ சங்கரரும் '' ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம் '' என்றார். எனவே,

அரிதான இந்த மனித ஜன்மாவைப் பெற்ற பொழுதே '' தான் யார் '' என அறிந்துகொள்ள வேண்டுமல்லவா ? இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ? யார் கண்டது ?

இப்படி தன்னை அறிவதற்கு சாஸ்திரம் பல கோடி இருக்கிறது. ஸாதனம் நால்வகை இருக்கிறது. ஸ்ரீ ஆதி சங்கரர் விவேக சூடாமணியில் 20 முதல் 32-ஆம் ஸ்லோகம் வரையில் நால்வகை சாதனங்களையும் பற்றி விளக்குகிறார்.

நான்கு வகை சாதனங்கள் :—

1. நித்யா நித்ய வஸ்து விவேகம்

2. இஹ — அமுத்ர — பல போக — விராகம்

3. சமாதி ஷட்க ஸம்பத்தி

4. முமுக்ஷுத்வம்

நித்யா நித்ய வஸ்து விவேகம் :—

இந்த உலகம் பொய், ப்ரம்மமே மெய் என்ற திடமான நிச்சய புத்தியே நித்யா நித்ய வஸ்து விவேகம்.

இஹ - அமுத்ர - பலபோக விராக:

இந்த உடல் தொடங்கி பிரம்மாவின் உடல் வரை கண், காது முதலியவற்ருல் ஏற்படும் இன்ப நுகர்ச்சிகளினின்றும் வெறுப்பு. இதுவே வைராக்யம் எனப்படும்.

சமாதி ஷட்க சம்பத்தி :—

சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, ஸமாதானம் என்ற ஆறு வகையான 'ஞானச் செல்வமே' சமாதி ஷட்க சம்பத்தி எனப்படும்.

சமம் : சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் முதலியவற்றில் அதனது தோஷத்தைக் காண்பதனுல் வெறுப்படைந்து தனது குறிக்கோளில் மனதை ஒருமுகப்படுத்துதலே சமம் எனப்படுகிறது.

தமம் : இரு வகையான இந்திரியங்களை (ஞானேந்திரியம், கர்மேந்த்ரியம்) அதனது விஷயங்களினின்றும் திருப்பி தத்தம் இருப்பிடத்தில் நிறுத்தி வைப்பதே தமம் எனப்படுகிறது.

உபரதி : வெளியே உள்ள பொருள்களிலுள்ள பிடிப்பு நீங்குதல் உபரதி எனப்படும்.

திதிக்ஷை ; எல்லா துக்கங்களையும் பொறுத்துக்கொண்டு அவற்றைப் போக்கும் வழியைத் தேடாமலும், அதே சமயத்தில் கவலையும், புலம்புதலும் இல்லாமல் இருப்பது.

சிரத்தை : சாஸ்திரத்தின் உண்மையிலும், குரு உபதேசத்திலும் ஸத்தியம் என்ற நிச்சய புத்தியே சிரத்தை எனப்படும்.

ஸமாதானம் : புத்தியை எப்பொழுதும் பரிசுத்தமான ப்ரம்மத்தினிடம் நிலைப்படுத்தி வைப்பதே ஸமாதானம் எனப்படும்.

முமுக்ஷுத்வம் :

அஹங்காரம் முதல் தேகம் வரை உள்ள தளைகள் அஞ்ஞானத்தால் கல்பனை செய்யப்பட்டவை என உணர்ந்து, தன்னுடைய உண்மையான ரூபத்தை அறிந்துகொண்டு தளைகளிலிருந்து விடுபட விரும்புதலே "முமுக்ஷுத்வம்" எனப்படும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் — 3 (தொடர்ச்சி)

இந்த நால்வகை ஸாதனங்களையும் கடைப்பிடித்து உயர்வதற்கு ஏற்றாற்போல் நேர்த்தியான விவேகமும் உள்ளது.

न तत्र सूर्यो भाति न चन्द्र तारकं ।
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ॥

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்னி: ||

என்றபடி இந்த ஆத்ம ஒளியே - பாத்திரத்திற்கு தகுந்தபடி - விளக்கு, குத்துவிளக்கு, அகல்விளக்கு என்று பெயர் பெறுவது போல - எல்லாவற்றிலும் ப்ரகாசிக்கிறது: இதனை அறிந்துணரச் செய்வதற்கு உலகில் பெரியோர் பலர் இருக்கின்றனர்.

" ஜகதீம ஹிதும் கவிதாக்ருதயோ,
விசரந்தி மஹா மஹஸ ச் சலத: |

என்று தோடகாஷ்டக வசனப்படி இவ்வுலகில் மஹான்கள் நமது நன்மைக்காக கபடமான உருவைப் பெற்று சஞ்சரிக்கின்றனர்கள்.

" அப்படிப்பட்ட மஹான்களை அண்டி - உன்னை இந்த வேளையே அறிந்து கொள்வாயாக" என்று கூறும் அம்மா மேலும் " உன்னுடைய ஆத்மஸ்வரூபத்தை மறைந்து நிற்கும் மாயையை அறிவாய் " என்றும் கூறுகிறார்.

இந்த மாயையால் தான் காரண காரிய ப்ரபஞ்சம் தோன்றுகிறது. உடலே நாம் என்ற எண்ணம் உண்டாகிறது. மேலும் ஆரணம் என்றால் வேதம் அல்லது வேதத்தின் ஞான பாகம் என்பது பொருளாம். அகமர்ஷண ஸூக்தத்தில் " ஆர்த்ரம் ஜ்வலதி . . . . , ஸ்வாஹா" என்று ஆரணம் கூறுகிறதல்லவா! "ஆர்த்ரமாக ஜ்வலித்துக் கொண்டிருக்கக் கூடிய ஜ்யோதியே ஆத்மா" "அந்த ஆத்மாவே நான்" என்ற வேதத்தின் கூற்று எப்படி பொய்யாக முடியும்? அதனால் தான் " ஆரணம் பொய் சொல்லாதடா!" என்றாள். எனவே ஆத்மாவை அறிந்து (இதுவே பூரணமான ஆனந்தம் தானே!) ஆத்மாவை அறிந்து ஆத்மாவாகவே எங்கும் நிறைந்து விட்டால் பொல்லாததாகிற மாயையால் ஏற்படும் ஜன்மத் தொடர் நீங்கிவிடும்.

ஆனால் உலகில் பலர் தன்னையே யார் என்று அறிந்து கொள்ளாது மயக்கம் கொண்டுள்ளனர். அதோடு தன்னை யார் என அறிந்து கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட தயக்கம் கொண்டுள்ளனர். இது கருதியே திருமூலரும்—

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்." என்கிறார்.

ஸம்ஸாரமாகிய கடலில் உடலாகிய ஓடத்தில் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். இந்த உடல் நல்ல நிலையில் இருக்கின்றபோதே ஸாதனங்களாலும் விவேகத்தாலும் "உடல் ஒரு ஓடம்; ஆத்மாவே நாம்" என்பதை உணர வேண்டும். இந்த ஸித்தி — முக்தி கூடியவுடன் எந்தக் கடலைக் கண்டு நாம் பயந்து கொண்டிருந்தோமோ, எதனை ஸம்ஸாரக் கடல் என்று நினைத்துக் கொண்டிருந்தோமோ அதனையே பேரானந்தக் கடலாக உணரத் தொடங்கிவிடுவோம். பின்பு எவ்வாறு கடல்வாழ் பிராணிகள் சுதந்திரமாக கடலில் சஞ்சரிக்கின்றனவோ அதனைப் போல மஹான்களாக ஸித்தர்களாக நாமும் இவ்வுலகில் சஞ்சரிக்கலாம்.

இப்படி பேரானந்த கடலிலே மூழ்க வேண்டுமானால் 'உடலே நான்' என்பதான மூட புத்தியை துரத்த வேண்டும். ஆத்மாவை அறிந்துணர்ந்து இணைவதான ஜீவன் முக்திவழியில் மனதை நிறுத்த வேண்டும். கடோபநிஷத் கூறியபடி "எவன் ஆத்மாவை அறிய ஆத்மாவையே சரண் புகுகின்றானோ அவனாலேயே அது அடையப்பெறும் அல்லவா!"

அரியதாகிய மனிதப் பிறவி கிடைத்தும் பலகோடி சாஸ்திரங்கள் இருந்தும், நன்றான ஸாதனங்கள் நான்கிருந்தும், கூன் குருடு செவிடு நீங்கிப் பிறந்திருந்தும், இவற்றை அறிவதற்கான விவேகத்தைப் பெற்றிருந்தும், இவற்றிற்கெல்லாம் காரணமான "தன்னை" எவன் அறிந்துகொள்ள சிறிதும் முயலவில்லையோ அவனைப்பார்த்து கூடஸ்தரான ஈசுவரன் சிரிக்கிறார். ஏனென்றால் எத்தனை வசதிகளை வாய்ப்புகளை அருளை நாம் பொழிந்தாலும் தான் முக்தியடையவேண்டும் என்ற ஆர்வம், முயற்சி அவரவர்களுக்கன்றோ நெஞ்சில் உதிக்க வேண்டும் என்று எண்ணியே கூடஸ்தரான ஈசன் சிரிக்கிறாராம்.

இவ்வாறு பலவிதமாகக் கூறிய அம்மா "அஞ்ஞான இருளைப்போக்கி ஆனந்த ஒளியாய் ஆக்கி தன்னை உணர வைக்க எங்கள் குரு வேங்கடேசர் இருக்கிறார்" என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறாள்.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் – 4 ([redacted])

பல்லவி ராகம்: தோடி

ஸ்வரூபமே நீ தானடா — ஜீவா
சுத்தஸ்வரூபமே நீ தானடா.......... (ஸ்வ)

அனுபல்லவி

ஸ்வரூபம் நீதானென்றாலும் தோன்றுவதில்லை ஏதடா
வரும் மெய்ஞானம் உனக்கு வாராதென்கிறாய்
மூடா.......... (ஸ்வ)

சரணம்

போதாகாரமாயிருந்தும் புத்திகெட்டு போச்சோடா
உன்பேத புத்தியினாலே வெகுஜன்ம மெடுத்தாயடா
வேதசாஸ்திரம் பிரம்மம் நீதானென்று சொல்லுதேயடா
விகல்பங்களற்றதானால் விஸ்வமெல்லாம் நீயடா
பார்த்துணர்ந்து நாமரூபம் பாழாக்கியே போடடா
பரமாத்ம ஸ்வரூபத்தை பார்த்து முக்தி சேரடா (ஸ்வ)

லகுவாய் உன்னையறிந்து லக்ஷியம்வைத்து பாரடா
வெகுகர்மம் பண்ணினாலும் வ்யர்த்தம் பலனேயடா
சின்மயமாய் தானிருந்தும் தெரியவில்லை யேதடா
சிதேகரஸானந்தத்தால ஜீவன முக்தி சேரடா,
தன்மயமாய் தானிருந்தும் தனித்திருந்து பாரடா,
ஸம்சயப்படாதே குருஸ்வாமி சொன்னால் கேளடா
(ஸ்வ)

ஜீவன் எப்படிப்பட்டவன் என்பதை ஸ்ரீ குருவின் வாக்காக விளக்கமாக இந்தப் பாடலில் விளக்குகிறாள்.

ஸந்தேஹம், விபரீதம் இரண்டும் அழியவேண்டிய நிலை என்பது ஆன்றோர் வாக்கு. அதுவும் குருவின் வாக்கியத்தில் ஸம்சயத்திற்கு அறவே இடமில்லை அல்லவா !

ஜீவனது ஸ்வரூபத்தைப் பற்றி விளக்கவந்தவள் "ஸுத்த ஸ்வரூபமாக நீ இருக்கிறாய் என்று உன்னை ஸ்ரீ குரு சொன்னால் அதில் ஸம்சயப்படாதே" என்கிறாள்.

ஸ்வரூபம் என்றால் தன்னுடைய ரூபம் என்கிறது. இங்கே ஜீவனுடைய ஸ்வரூபம் எது ?

ஆத்மாவே ஜீவனுடைய ஸ்வரூபம்! அந்த ஆத்மா எப்படிப்பட்டது ?

அது ஸூத்தாத்மா !

நாமரூபம் எதற்கு இருக்கிறதோ அவை அழியக் கூடியவையே ! ஆத்மா அழியாதது.

ஆனால் மாயையில் மயங்கிய, அவிவேகத்தில், அவித்தை யில் ஆட்பட்ட ஜீவனே தன்னை நாமரூபம் உடையவனாக பாவித்துக்கொண்டிருக்கிறனே ! இவனுக்கு எப்படி நாமரூப மற்ற ''ஆத்மா''வை விளக்குவது என்று எண்ணியவள்—

''உன்னுடைய ஸ்வரூபம் எப்படிப்பட்டது தெரியுமா ? அது சுத்தஸ்வரூபம். ஏனென்றால் அது எதனாலும் பாதிக்கப்பட வில்லை. நீ மாயையினால் அதனை அறியாவிட்டாலும் சரி, அல்லது அது நீங்கிய காலை அறிந்தாலும் சரி, உன்னுடைய ஸ்வரூபம் தன்னிலையிலேயே இருக்கிறது ''என்று விளக்கும் அவள்— மாயை யின் வசப்பட்ட மனதை நோக்கி ''ஸ்வரூபம் நீதான். அதாவது தன்னிலையிலிருக்கும் ஆத்மா நீதான் என்பது உனக்குத் தோன்றவில்லையா ?'' என்றும் கேட்கிறாள். மேலும் மனித உடல், நால்வகை ஸாதனங்கள், விவேகம் இவையனைத் தும் பெற்றிருந்தும் இந்த உலகிலுள்ள கலைகளையெல்லாம் '' நம்மால் முடியும் '' என்று நம்பி ஆர்வமுடன் பயிலுகின்ற நீ '' தன்னையறிதல் '' என்ற மெய்ஞானத்தை அதாவது தன்னைத் தானே யார் ? என்று ஆராய்கிற மெய்ஞானத்தை ''வராது'' என்று கூறினால் உன்னைப்போல் மூடர் எவருமில்லை என்று கூறுகிறாள்.

இந்த ஜீவன் பரமாக எங்கும் நிறைந்திருந்தும், தான் போதாகாரமாயிருந்தும் இவன் புத்திகெட்டு அதாவது அதனை மறந்துபோய்விட்டான்.

'' அங்கிங்கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்தது '' என்று உணரவில்லை.

இதனால் பேதபுத்தி ஏற்பட்டுவிடுகிறது. ஒன்றாக இருந்ததை அவன் பேதமாக, பின்னமாக காண்கிறான்.

ப்ரம்மத்திடம் பேதபுத்தி [illegible]
[illegible] ஐயமில்லையல்லவா?

கனவிலே எப்படி ஒருவன் தன்னுடைய உண்மை நிலையை மறந்து கனவுலகில் சஞ்சரிக்கிறானோ அப்படி வேத சாஸ்திரங்களெல்லாம் "பிரம்மம் நீதான்" என்பதை குருவருளால் சோதித்து அறியாது மாய இருளில் மூழ்கி அக்ஞான உலகில் சஞ்சரிக்கிறவன் தனது உண்மை நிலையை உணராது வெகு ஜன்மம் எடுத்துக்கொண்டிருக்கிறான்.

இந்த ஜன்மத்தொடர் அறுபடவேண்டுமானால் ஜீவன் விகல்பங்களற்று விளங்கவேண்டும். விகல்பம் என்பதற்கு சந்தேகம், தவறு, வேற்றுமை என பல அர்த்தங்கள் உண்டு. தன்னைத் தவிர வேறொன்று உள்ளதாக செய்யப்படும் கற்பனையே வேற்றுமை.

வேற்றுமை நீங்குகின்றபோது ஒருவன் விச்வரூபத்தை உணர்கிறான். விச்வம் என்றால் எல்லாம் என்பது பொருள். எல்லாவற்றிலும் தன்னுடைய சுத்த ஸ்வரூபத்தை உணர்வதே விச்வரூப தரிசனம்.

இரண்டு புராண உதாரணங்களைக்கொண்டு "விகல்பங்களற்றதானால் விச்வமெல்லாம் நீயடா" என்ற ஸ்ரீ ஆவுடையம்மாளின் பாடல் வரிகளின் அனுஸந்தானத்தை அடுத்த இதழில் செய்வோம். (தொடரும்)

ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் — 4 (தொடர்ச்சி)

பரமாத்ம ஸ்வருபம் ஒவ்வொரு அணுவிலும் நிறைந்துள்ளது. அதனைத் தவிர்த்து வேறு ஒரு பொருள் இல்லாமையினால் அது விஸ்வருபமாக விளங்குகிறது. எல்லாமாக இருப்பதனால் ஜீவனும் பரம்பொருளே. ஆனால் அதை அவன் உணரவில்லை. விகல்பத்தோடு (வேற்றுமையோடு) இருக்கிறான்.

பிரகலாதன், திருமாலிடம் பேதபுத்தி கொண்டிருந்த ஹிரண்ய கசிபுவிற்கு விகல்பமில்லாத ப்ரம்மத்தின் விஸ்வருப தன்மையை அழகாக விளக்குகிறான், பின்வரும் பாடலின் மூலம்:—

சாணினு முளனோர் தன்மை
அணுவினைச் சதகூறிட்ட
கோணினு முளன் மாமேருக்
குன்றினு முளனுன் னின்ற
தூணினு முளன்முன் சொன்ன
சொல்லிலு முளன் இத்தன்மை
காணுதி விரைவில் !

நாம் ஒவ்வொருவரும் ப்ரகலாதனைப் போன்றவர்களே ! நம்மிடம் உள்ள விகல்பமே ஹிரண்ய கசிபு ! நாம் எல்லாவிடத்திலும் நிறைந்த பரமாத்ம ஸ்வருபத்திடமிருந்து வந்த பிந்துவே என்பதை உணராது விகல்ப புத்தியோடு இருக்கிறோம். இந்த விகல்பமாகிற ஹிரண்ய கசிபுவினால் பிறப்பு இறப்பு என்னும் மலையிலும், கடலிலும தள்ளப்பட்டு 'காலன்' என்னும் விஷத்தைக் குடித்துக் கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கிறோம்,

காலன் என்னும் விஷம் நம்மைப் பாதிக்காமலிருக்க வேண்டுமானால் விகல்பங்களற்ற விஸ்வமான பரமாத்மாவே நம் உண்மையான ஸ்வருபம் என்கிற திடபுத்தி குருவருளால் ஏற்பட வேண்டும். இதுவே மஹாவாக்ய சிரவண மனன நிதித்யாஸனமென்னும் நரஸிம்மாவதாரம் எனலாம்.

இப்படி நிறைந்த பொருளை அடக்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ ஆவுடையம்மாவின் இந்தப் பாடல் வரிக்கு பாரதப்போரின் தொடக்கம் சான்ருக அமைகிறது.

பாரதப்போரின் தொடக்கத்திலே பார்த்தன் தன் மனதிலே கலக்கமுறுகிருன். உறவினர், பகைவர், நண்பர்களை யெல்லாம் போரிலே எதிர்க்க மனம் துணியாது பரமனை அடி பணிகிருன். அப்போது கண்ணன் அவனுக்கு, அவனுடைய உண்மை ஸ்வரூபத்தை விவரிக்கிருன். தனது உண்மை ஸ்வரூபத்தை விகல்பங்களையெல்லாம் மறந்து உணருகிருன் அர்ஜுனன். அப்போதுதான் அவன் விஸ்வரூபத்தை தரிசிக்கிருன். விஸ்வரூபத்தை தரிசித்தவுடன் அவனது மயக்கம் தீர்ந்துவிடுகிறது. இதை அர்ஜுனனே கூறுகிருன் :—

''ஆத்ம ஞானமென்ற பரம ரஹஸ்யத்தை நீ உணர்த்தியவுடன் எனது மயக்கம் தீர்ந்துபோயிற்று.''

"மதனுக்ரஹாய பரமம் குஹ்ய — மத்யாத்ம ஸம்ஞிதம்!
யத் — த்வயோக்தம் வசஸ்தேன மோஹோ஽யம்
விகதோமம !!"

இவ்வாறு ''விகல்பங்களற்றதானல் விஸ்வமெல்லாம் நீயடா'' என்ற வரி, விஸ்வரூப தரிசனம் செய்யவேண்டுமானல் அங்கு விகல்பம் அற்று இருக்கவேண்டும் என்பதை உறுதிப் படுத்துவதுபோல் புராணங்களுடன் ஒப்புநோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

நாமரூபத்தினலேயே விகல்பம் ஏற்பட்டது; எனவே நாமரூபத்தை பார்த்துணர்ந்து பாழாக்க வேண்டும். அகண்டாகார விருத்தியாகிற ஆத்ம ஸ்வரூப மனனத்தினலேயே நாமரூப நாட்டம் ஒழியும். ''நீ நாமரூபம் உடையவனல்லன்; பரமாத்ம ஸ்வரூபமே நீ'' என்ற ஸ்ரீ ஆவுடையம்மாளின் பாடல் வரிகள் அப்பர் பெருமானின் பாடல் ஒன்றுடன் ஒப்பு நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

ஒப்புடையனல்லன், ஒருவனல்லன்,
ஓரூரனல்லன், ஓர் உவமன் இல்லி,
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே.

இப்படிப்பட்ட ஆத்ம ஸ்வரூபத்தை குருவருளின் மூலம் எளிதாக - லகுவாக அறிந்து கொள்ளலாம்! என்றாலும் லகுவாய் அறிந்த பொருளின் லக்ஷியம் வைக்க வேண்டும். தனது ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து, உணர்ந்து அதோடு லயிப்பதே உயர்ந்த லக்ஷியம்! இந்த லக்ஷியத்தை வெளியிலே செய்யும் கர்மங்களின் மூலம் அடையமுடியாது. ஏனென்றால் இந்த லக்ஷியம் நம்மாலேயே நமக்குள்ளேயே அறியப்படவேண்டியது. எனவே ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதற்கு அல்லாமல் செய்யப்படும் கர்மங்கள் அனைத்தும் வியர்த்தமே ஆகும். ஏனென்றால் லக்ஷியத்தை அடைவிக்கமுடியாத எந்த செயலும் வியர்த்தம் தானே!

இப்படிப் பாடி வருகின்ற ஸ்ரீ ஆவுடையம்மாள் "சின்மயமாய்த் தானிருந்தும் உனக்கு அது தெரியவில்லையே!" என்று அதிசயிக்கிறாள்.

—தொடரும்

ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் — 4 (தொடர்ச்சி)

ஜீவனின் ஸ்வரூபத்தை விளக்கிக் கொண்டுவந்த ஸ்ரீ ஆவுடையம்மாள் ஜீவன் முக்தி நிலை எப்படிப்பட்டது என்று கூறுகிறாள்.

சித் + மயம் = சின்மயம். சித் என்றால் அறிவு. மயம் என்றால் வடிவு. இந்த ஜீவன் அறிவு வடிவானவன். இருந்தும் அவன் அதை உணரவில்லை. அதை உணரும்போது அவனுக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. எது நித்தியமானதோ அதுதான் ஆனந்தம். அறிவு நித்தியமானது. அறிவு என்றால் அதை அறிகிறவன் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா? அறிவால் அறிபவன் ஜீவன் என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில் அறிவு நித்தியமானதென்று கூறப்படுவதால் அது சிருஷ்டிக்கு முன்னும், ஸம்ஹாரத்திற்குப் பின்னும் இருக்கவேண்டும். அறிவு நித்தியமானதினால், அறிபவனும் நித்தியமானவனே! ஜீவன் இதை உணருகின்றபோதுதான் நித்தியமானவனாக அதாவது சிவனாக ஆகிறான். இதுவே ஜீவன்முக்தி. இதனால் ஏற்படும் ஆனந்தம் ஒன்றானது; ரஸமானது; அறிவு வடிவானது. சித் + ஏக + ரஸ + ஆனந்தம = ஜீவன்முக்தி.

ஜீவன் முக்தியாகிற சித் ஏகரஸானந்தமே ஜீவனுடைய உண்மை வடிவு. இந்த உண்மை வடிவை எப்படி அறிவது? அதற்கு தத்வசோதனமும், உபதேச பூர்வகமான மஹாவாக்ய சிரவணமும அவசியம் என்று பெரியோர் கூறுவர். எனவே ஜீவன் உடல், மனம், கரணங்கள் இவற்றை தனித்துக் காண வேண்டும். " பிருகிருதியாதி தத்துவக்கூட்டங்கள் நானல்ல; தத்வாதீதமாகிய ஸுத்தப் பிரஹ்மமே நான் என்கின்ற நிலையில் 'தனித்திருந்து' பார்த்தால் நீ ஜீவன்முக்தி அடைந்தவன் ஆகிறாய் " என்று கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள் " அப்போது நீ தன்மயமானவனாகிறாய் " என்கிறாள். அதாவது தன்மயமாக, உன்னுடைய உண்மை வடிவாகவே ஆகிறாய் என்கிறாள்.

இந்த உண்மை வடிவே ப்ரஹ்மத்தின் இயல்பு. ஜீவனின் இயல்பும் அதுவே. ஆனால் ஜீவன் தன்மயமாக

இருந்தும் சிதேக ரஸானந்தத்தை தனக்கு வெளியே காண்கிறான். இதுவே விகல்பம். இது நாமரூபத்தினால் ஏற்பட்டது. இந்த விகல்பம் நீங்கி விச்வமாக ஆக வேண்டுமானால் ஸ்ரீ குருவினது கூற்றான வேத சாஸ்திரங்களின் இறுதி முடிவான தத்வமஸ்யாதி மஹாவாக்கியத்திலே ஸம்சயம் அறவே நீங்க வேண்டும். இந்த அக்ஞான நிக்கமே மெய்ஞானம். மெய்ஞானம் என்பது எங்கோ சென்று அடைவதில்லை. இது ஒவ்வொருவருக்குள்ளும் இயல்பாய் இருக்கின்ற ஞானமே! இதனை வராது என்று கூறுபவர் மூடராகத்தான் இருக்க வேண்டும் என்று கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள் இந்த ஞான அடைவே மோக்ஷம் என்கிறாள். மேலும் இந்த அக்ஞான நீக்கத்தையே உன்னுடைய லக்ஷியமாக வைத்துக்கொள்; இந்த லக்ஷியத்தை அடைவிக்காத எந்த செயலை நீ செய்தாலும் அது வியர்த்தமே என்று தீர்மானமாகக் கூறுகிறாள்.

இவ்விதம் ஜீவனுடைய ஸ்வரூபத்தையும், அதை உணர்வதற்கான வழியையும், அதை உணர்ந்தபின்னர் உள்ள ஆனந்த நிலையையும் இந்தப் பாடலில் ஸ்ரீ ஆவுடையம்மாள் அழகாக விளக்குகிறாள். ஸ்ரீ குருவிற்கு ஸ்வாமி என்ற ஒரு பெயர் உண்டு. "ஸ்ரீ குருஸ்வாமி சொன்னால் அதைக் கேள்") என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறாள்.

(தொடரும்)

ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

ராகம் : கல்யாணி
பாடல் : 5

பல்லவி

மானத்துடனே போடி மாயை மானத்துடனே போடி (மான)

அனுபல்லவி

வானொத்த குரு வெங்கடேசுவரரிங்கே ஒரு தியானத்திலுண்டு
அவர் ஞாலத்திலுண்டு சொன்னேன் (மான)

சரணம்

வாஸனு வசத்தாலே வந்தவழிகள் அறிவேனடி
கோசத்துக்கப்பாலே நான் குடியிருப்பதறியாயோடி
பாசக்கொடியறுந்தும் ஆசைக் கடல் கடந்தும்
வாசல்படி கடந்த மாசற்ற ஜோதியடி (மான)

தத்வமறிவேனடி என்கிட்டே தாறுமாறு ஏண்டி
சித்ருபனடி எங்கும் சிறந்த ஞானமடி
வஸ்து நிலையை நானுற்றுணர்ந்த பரிசுத்த
ஸ்வருபஞன அத்விதியம் நானடி (மான)

குஷ்டரோகமயம் உன்குலமயம் தீண்டிப் பிறவேனடி
கிட்டகூடாதுபோடி நாதாந்த திருஷ்டி எனக்குண்டுபோடி
பட்ட பகலிருட்டை கிட்டவர வொட்டுமோடி
துஷ்ட மாயை ஞானம் சுட்டுவிட்டுமடி (மான)

விளக்கம் : ஸ்ரீ ஸத்குருவை தியானம் செய்கின்றபோது மாயை எப்படி மானத்தோடு போய்விடுகிறது என்பதை ஸ்ரீ ஆவுடையம்மாள் இந்தப் பாடலில் அனுபவித்துப் பாடுகிருள்.

ஒளி இருக்கும் இடத்தில் இருட்டுக்கு எப்படி வேலை இல்லையோ அதுபோல் ஞானமிருக்கும் இடத்தில் மாயைக்கு வேலையில்லை அல்லவா ?

"எவ்வாறு பட்டப்பகல் இருட்டை தன்னிடம் நெருங்கக் கூட விடுவதில்லையோ அதுபோல் துஷ்டதனம் செய்கின்ற மாயையை ஞானமென்னும் தீ சுட்டு விரட்டிவிடுகிறது" என்று கூறவந்த ஸ்ரீ ஆவுடையம்மாள் அந்த ஞான ஒளி ஏற்படும் வழியை அனுபல்லவியில் கூறுகிருள், இவ்வாறு:

"ஓ மாயையே! வானைப்போல எங்கும் நிறைந்த ஸ்ரீ வெங்கடேசுவர குரு என் தியானத்தில் ஒளியுடன் விளங்குகிருர். அப்படி தியான யோகத்தில் பழகிப் பழகி ஞாலம் முழுவதிலும் நான் ஸ்ரீ ஸத்குருவையே காண்கிறேன். அதனுல் உனக்கு இங்கு வேலையில்லை! எனவே நீ மானத்துடன் போய்விடுவாய்!"

த்வைத பாவமே மாயைக்குக் காரணம். ஸத்குருவின் உபதேசத்தினுல் அத்வைத பாவம் ஸித்திக்கிறது.

ஞான ஒளி பெற்றவனுல்தான் மாயையைப் பிரித்தறிய முடியும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுகிருர்:—

ஈஸ்வரன் மாயையோடு நீரும் பாலும் போல கலந்து இருக்கிருன். அன்னபக்ஷி (ஹம்ஸம்) எப்படி நீருடன் கலந்த பாலைமட்டும் அருந்திவிட்டு நீரைத் தள்ளிவிடுகிறதோ அதைப் போல பரமஹம்ஸர்கள் மாயையை அகற்றி ஈஸ்வரனை அறியும் சக்தி கொண்டவர்கள்.

ஜீவன் ஹம்ஸத்திற்கு ஒப்பானவனுக இருக்கிருன். ஸத்குரு அவனுக்கு "ஹம்ஸமாகிய நீ சிவமே" என்று உணர்த்துகிருர். அப்போது ஜீவன் பரமஹம்ஸனுகிருன். அப்போது அவனுக்கு "மானத்துடனே போடி" என்று மாயையை விரட்டக்கூடிய ஞானம் ஏற்பட்டு முக்தனுகிருன்.

"மாயை விலகியவுடன் —
வானுய் நிறைந்த ஸத்குரு,
"நீ அதுவே" என்ற அவரின் உபதேசம்,
தத்பத லக்ஷ்யார்த்தமான ப்ரம்மம்"

இம்மூன்றும் ஒன்ருகி ஞாலம் முழுவதும் ஸத்குருவாகவே காட்சி அளிக்கிறது" என்று கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள் "ஓ மாயையே வாஸனு வசத்தாலே வந்த வழிகள் அறிவேனடி" என்கிருள் சரணத்தில். (தொடரும்)

ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் 5 (தொடர்ச்சி)

மாயை அனாதியானது. மாயையின் இயல்பைப்பற்றி ஸ்ரீ ஆதிசங்கரர் விவேக சூடாமணியில் கூறுகின்றபோது,

"ஸந்நாப்ய ஸந்நாப்யு பயாத்மிகா நோ
பின்னாப்ய பின்னாப்யு பயாத்மிகா நோ
ஸாங்காப்ய னங்காஹ்யு பயாத்மிகா நோ
மஹாத்புதாsநிர் வசனீயரூபா" (109)

என்கிறார். அதாவது மாயை இருப்புடையதன்று ; இருப்பில்லாதுமன்று ; இருவகைப்பட்டதுமன்று ; பகுக்கப்படாததாகவோ இருவகைப்பட்டதாகவோ அது இல்லை. அங்கங்களை உடையதாகவோ அங்கங்கள் இல்லாததாகவோ இருவகைப் பட்டதாகவோ இல்லை ; மிகவும் ஆச்சரியமானது ; இப்படிப்பட்டதென்று கூறமுடியாத ரூபம் உடையது என்கிறார்.

சிறந்த புத்திமானால்தான் அதனுடைய செயல்களினின்று அது ஊகித்து அறியப்படுகிறது. ஸ்ரீ ஆவுடையம்மாள் சிறந்த புத்திமானும், ஞானியும் ஆனதால் மாயையை நோக்கி "நீ வந்த வழிகள் அறிவேனடி" என்கிறாள். ஆத்மஸ்வரூபமே தான் என்று உணர்ந்த அந்த அம்மாள் "கோசத்துக்கப்பாலே நான் குடியிருப்பதறியாயோடி" என்கிறாள்.

கோசம் என்றால் உறை என்பது பொருள். பஞ்சகோசங்களுக்கு அப்பால் ஆத்மா எப்படி குடியிருக்கிறது என்பதை சுருக்கமாகக் காண்போம்.

அன்னமய கோசத்துக்கப்பால் :

இந்த உடல் உணவினாலேயே உருவாக்கப்பட்டு பிழைத்திருக்கிறது ; உணவில்லாவிட்டால் அழிந்துபோகிறது. இப்படிப் பட்டதே அன்னமயகோசம்.

அன்னமயகோசமாகிய உடல் பிறப்பிற்கு முன்பும் இறப்பிற்கு பின்பும் இருப்பில்லாதது; பார்க்கப்படுவது. எது ஆதியிலும் முடிவிலும் இல்லையோ அது இடையிலும் இல்லை அல்லவா? எனவே இடையிலே மட்டும் தோன்றும் அன்னமய உடல் ஆத்மா ஆகாது. மேலும் உடல் பார்க்கப்படுவதால் ஆத்மா அல்ல.

பிராணமய கோசத்துக்கப்பால் :

கர்மேந்திரியங்கள் ஐந்துடன் இணைந்த பிராணன் பிராணமய கோசம் எனப்படுகிறது.

மனதால் பிராணனை அடக்க இயலும். அதனால் பிராணமய கோசத்திற்கு அப்பாற்பட்டது ஆத்மா. ஏனென்றால் ஆத்மா எதனாலும் அடக்க இயலாதது. (''பிராணனாலோ அபானனாலோ எவனும் ஜீவித்திருக்கவில்லை. எதை இவ்விரண்டும் ஆதாரமாக உடையதோ அதனாலேயே (ஆத்மாவாலேயே) ஜீவித்திருக்கிறான்'' என்கிறது கடோபநிஷத்)

மனோமய கோசத்துக்கப்பால் :

ஞானேந்திரியங்களும் மனதும் மனோமய கோசமாக ஆகின்றன.

நான், என்னுடையது என்ற விகல்பங்களுக்கு ஹேதுவாக உள்ளது மனோமயகோசம்; மனதிற்கு ஆரம்பமும் முடிவும் உண்டு; மாறுதல் அடைவது; துன்ப வடிவானது; பார்க்கப்படுவது.

இத்தகைய இயல்புகள் ஆத்மாவிற்கு ஏற்புடையன அல்ல. எனவே ஆத்மா மனோமயத்திற்கு அப்பாற்பட்டது.

விஜ்ஞானமய கோசத்திற்கப்பால் :

புத்தியானது, ஞானேந்திரியங்களுடன் கூடி ஜீவன் எனும் பெயர் பெற்று விஜ்ஞானமய கோசமாகிறது.

உடல் முதலியவற்றில் நான் என்ற அபிமானமும், ஆசிரமம், தர்மம், கர்மம், குணம் முதலியவற்றில் என்னுடையது என்ற எண்ணமும் விஜ்ஞானமய கோசத்தோடு கூடிய ஜீவனுக்கு இடைவிடாது உள்ளது. விஜ்ஞானமயம் மாறுபடுவது; ஜடமானது; அளவுக்குட்பட்டது; காணப்படுவது; நிலை பிறழ்வது.

எனவே, இது பிரகாசமுடையதாயினும் இதற்கு அப்பாற்பட்டதே ஆத்மா.

ஆனந்தமய கோசத்திற்கப்பால் :

தனக்கிஷ்டமான பொருள் கிட்டியபோது ஏற்படும் பிரியம் மகிழ்ச்சி முதலிய குணங்களுடன் கூடியதும், ஆத்மஸ்வரூப ஆனந்தத்தின் பிரதிபிம்பத்தால் வியாபிக்கப்பட்ட வடிவுடையதாயும், பரிணாமம் உடையதாயும் உள்ளது ஆனந்தமயகோசம். இந்த ஆனந்தம் புண்ணிய செயலால் ஏற்படும் இயல்புடையது.

உபாதியுடன் கூடியது; பிரகிருதியினால் மாறுபாடுடையது; புண்ணியச் செயலால் ஏற்படுவது; மாறுபாடுடைய அன்னமயம் முதலிய கூட்டத்துடன் கூடியிருப்பது.

இத்தகைய இயல்புகளுக்கு அப்பாற்பட்டதே ஆத்மா. இப்படி பஞ்சகோசங்களினின்றும் விலக்கப்பட்டபின் எது ஞான வடிவாயும், ஸாக்ஷி வடிவாயுமுள்ளதோ அதுவே ஸ்வயம் ஜோதியான ஆத்மா !

ஸ்ரீ ஆவுடையம்மாள் இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபத்தை, ''பாசக் கொடியறுந்தும், ஆசைக் கடல் கடந்தும் வாசல்படி கடந்த மாசற்ற ஜோதியடி'' என்கின்றாள்.

கோசத்துக்கப்பாலே குடியிருக்கும் அந்த வாசல்படி கடந்த மாசற்ற ஜோதியைப்பற்றி அடுத்த இதழில், இன்னும் சிறிது குருவருளால் காண்போம். (தொடரும்)

ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.

பாடல் 5 (தொடர்ச்சி)

ஆத்மா குடியிருக்கும் வீடு இந்த உடல். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கலவைகளால் ஆனது இந்த உடல். பாசமாகிய கொடிகளால் சூழப்பட்டது; ஆசையாகிற கடலிலே அலைக் கழிக்கப்படுவது. இப்படி வாஸனா வசத்தாலே வந்த வழிகளில், சித்ரூபனாக விளங்கும் ஆத்மா, மாயையின் வலிமையால் சிறை பட்டுவிட்டதுபோல தோன்றுகிறது. ஆனாலும் ஆத்மஸ்வரூபம் மாசற்று விளங்குகிறது. ஏனெனில் அந்த மாசற்ற ஜோதி இந்த கோசமென்னும் வீட்டின் வாசல்படி கடந்தும் விளங்குகிறது.

ஸத்குருவின் தியான பலத்தினால் "பாசமாகிற கொடிகளை அறுத்தும், ஆசையாகிற கடலைக் கடந்தும், உடலாகிய வீட்டின் வாசல்படி கடந்தும் மாசற்று விளங்கும் ஜோதியே தான்" என்று உணர்ந்த ஸ்ரீ ஆவுடையம்மாள், மாயையை நோக்கி மேலும் கூறுகிறார்: "தத்வமறிவேனடி என்கிட்டே தாறுமாறு ஏண்டி!"

உலகிலுள்ள ஒரு வஸ்து அல்லது பொருள் பிரகாசிக்கிறது என்றால் அது ஆத்மஸ்வரூப பிரகாசத்தினாலேயே பிரகாசிக்கிறது என்பது ச்ருதியல்லவா?

"ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி:।
தமேவ பாந்த-மனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி॥"

என்பதுபோல் ஒவ்வொரு பொருளினுடைய நிலையையும் உற்று உணர்கின்றபோது அதன் பிரகாசத் தன்மை ஆத்மஸ்வரூபத்தின்பாற்பட்டது என்பதும் அறியப்படுகிறது. எனவே ஆத்மஸ்வரூபத்திற்கு புறம்பான வேறொன்று வெளியில் இல்லை. அது அத்விதீயம். "சித்ரூபமாகப் பிரகாசிக்கும் அத்விதீயமே

தான்" என்று ஸத்குருவருளால் உணர்ந்த ஸ்ரீ ஆவுடையம்மாள் மாயையை நோக்கி, "என்னைத் தவிர வேறென்றிருப்பதாக ஒரு தோற்றத்தை உண்டுபண்ணி என்னிடம் தாறுமாறு செய்யாதே" என்கிருள்.

ஆத்மா பரிசுத்தமானது; அளவிடற்கரியது. அனுல் மாயையோ அழுக்கானது; அளவுக்குட்பட்டது. பரிசுத்தமான அங்கங்களை உடைய ஒருவன் குஷ்டரோகத்தால் பீடிக்கப் பட்டால் எப்படி இருக்குமோ அப்படி மாயையானது பரிசுத்த மான ஆத்மாவை சிறியவனை, அழுக்குள்ளவனை தோன்றச் செய்கிறது. மாயையின் கூட்டுறவே பிறப்பிற்குக் காரணம். 'குஷ்டரோகம் எப்படி தீண்டியவனையும் பற்றிக்கொள்ளுமோ அப்படி மாயையும் ஒரு தொற்றுவியாதியே' எனக் கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள் மாயையை நோக்கி மேலும் கூறுகிருள்:- "குஷ்டரோகமயமாக இருக்கும் மாயையே, நீ என்னருகிலே வராமல் போய்விடுவாயாக! நீ உன்னுடைய சக்தியை குஹ்ய மாக மறைத்துக்கொண்டிருந்தாலும் அது குஷ்டரோகமயம் என்பதை என்னுடைய நாதாந்த த்ருஷ்டியினுல் நான் அறிவேன்" என்று. "நான் சச்சிதானந்த வடிவமே" என்பதை ஸ்ரீ ஆவுடையம்மாள் மேற்கண்ட மூன்று சரணங்களில் மறை முகமாக விளக்குகிருள்.

பஹ்வ்ருசோபநிஷத் ப்ரம்மத்தின் ஸத் - சித் - ஆனந்த ஸ்வரூபத்தை, யதஸ்தி ஸந்மாத்ரம், யத்விபாதி சின்மாத்ரம், யத்ப்ரியமானந்தம்

यदस्ति सन्मात्रम् । यद्विभाति चिन्मात्रम् । यत्प्रियमानन्दम् ।

என விளக்குகிறது. அதாவது எது இருக்கிறதோ அது "ஸத்" தின் வடிவு; எது பிரகாசிக்கிறதோ அது 'சித்' தின் வடிவு; எது ப்ரியமாயிருக்கிறதோ அது ஆனந்தத்தின் வடிவு என்று.

இப்படி உபநிஷத் கூறுகின்ற ஸத் - சித் - ஆனந்த ஸ்வ ரூபத்தை ஸ்ரீ ஆவுடையம்மாள் எவ்வாறு மறைமுகமாக உணர்த்துகிருள் என்பதை சுருக்கமாக ஸத்குருவருளால் காண் போம். முதல் சரணத்தில்:

"நான் இருக்கிறேன் (அஸ்தி)!" எங்கு இருக்கிறேன்? கோசத்துக்கப்பாலே குடியிருக்கிறேன். மாசற்ற ஜோதியாக எங்கும் நிறைந்து இருக்கிறேன்.

எது இருக்கிறதோ அது ஸத்தின் வடிவு. எனவே நான் "ஸத்". இரண்டாம் சரணத்தில் :

"நான் எப்படி இருக்கிறேன்? பரிசுத்தமாக இருக்கிறேன். ஒவ்வொரு வஸ்துவிலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறேன். எங்கும் சிறந்த ஞானமாக பிரகாசித்துக்கொண்டிருக்கிறேன்"

ஆகவே நான் "சித்ரூபன்". ஏனென்றால் எது பிரகாசிக்கிறதோ அது 'சித்'தின் வடிவல்லவா?

மூன்றும் சரணத்தில் :

நான் எப்போதும் பிரியத்தோடு இருக்கிறேன். (ஒளியிலே ஒரு பிரியம்; அதேபோல அழகானவற்றிலே ஒரு பிரியம்; குஷ்டரோகியிடம் நமக்கு இரக்கம் இருந்தாலும் பிரியம் இருப்பதில்லை அல்லவா?)

இவ்விதம் நான் பிரியத்தோடு இருப்பதால் நான் ஆனந்தத்தின் வடிவு. இவ்வாறு தனது ஸத் - சித் - ஆனந்த ஸ்வரூபத்தை விளக்கி, மாயை எப்படி தன்னிடமிருந்து விலகி இருக்கிறது என்பதை — நீர் விலக்கி பால் அருந்தும் ஹம்ஸம் போல் உணர்ந்த ஸ்ரீ ஆவுடையம்மாளே நாம் ஒரு பரமஹம்ஸர் என்று கூறலாமல்லவா?

இனி ஆருவது பாடலைப் பார்ப்போம். (தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை: நாகசுந்தரம், சென்னை-23.
(S/o அருட்சக்தி நாகராஜன்)

ராகம்: ஸஹானா பாடல்: 6

பல்லவி

அதிக ஸாமர்த்தியம் மாயை உன்தன்
வெகுவித நாட்டியம் (அ)

அனுபல்லவி

அகில ப்ரபஞ்சமாய் ஆனதும் போராமல் அகண்ட—
ரஸம் தன்னை
மறைத்தாய் தெரிய வொட்டாமல் (அ)

சரணம்

1. ஜடையாக மூன்று குணத்தினால் ஜகமெல்லாம் —
ஈன்று
வினையாலே ஜீவர்கள் மோகிக்கவே பார்த்தாய்
பவஸாகரம் தன்னில் முழுகிபோகவே பார்த்தாய்(அ)

2. ஜகத் தஸத்தென்றும் தேஹம் நாஹம் பரபிரம்மம் —
என்றும்
தெரிந்த பேரை கூட திகைக்கப் பண்ணியே —
வைப்பாய்
அகடித சௌரியம் அஹோ உன்தன் கூத்து (அ)

3. ஸஹஸ்ரத்தில் ஒருத்தன் உன்னையும் பார்க்க—
ஸாமர்த்திய கர்த்தன்
ஸர்வமும் பிரம்மமாய் தான் தானே ஸர்வமாய்
ஸ்வாமி வெங்கடேசுவரர் குரு கிருபையினாலே (அ)

4. ஸ்வரூபம் மறந்து ஸம்ஸாரத்தை ஸங்கம் போல் —
நினைந்து
துஷ்கர்ம ஸத்கர்ம பலன்களெல்லாம் கொண்டு
செத்து பிறக்க வைத்தாய் சற்றுமறிவில்லாமல் (அ)

5. தான் பிறரென்றும் சதுர்வித வர்ணங்களென்றும்
தாய் தந்தை பந்து தனமுண்டு எனக்கென்றும்
ஸம்ஸார ஸாகரத்தில் தானே உழலவைத்தாய் (அ)

6. சுவரில்லாத சித்திரம் போல் உந்தன் ஸ்வரூப—
மஸத்தியம்
ஜரையில்லை நரையில்லை ஜனன மரணமில்லை
கறையில்லை உன்னுடைய காரிய விசித்திரங்கள்(அ)

7. ஸ்படிக மண்டபத்தில் சுவானம் தன்னை தவிர—
கண்டவிடத்தில்
சாடி ஓடிக்கொண்டு கூடிக் குலைக்கும் போல்
நானுவிகல்பித நாய்போ லலைய வைத்தாய் (அ)

மாயையின் வலிமையைப் பற்றி இந்தப் பாடலில் ஸ்ரீ ஆவுடையம்மாள் விளக்குகிருள்.

விளக்க இயலாத மாயையின் இயல்பை சிறந்த புத்திமானன ஸ்ரீ ஆவுடையம்மாள் எவ்வளவு அழகாக இந்தப் பாடலில் விளக்குகிருர் பாருங்கள் !

மாயை பலவிதமாய்த் தோன்றக் கூடியதாகையால் 'வெகுவித நாட்டியம்' என்கிருள். 'அகண்ட ரஸம் தன்னை தெரியாமல் மறைத்தது அந்த மாயை' என்று கூற வந்த ஸ்ரீ ஆவுடையம்மாள், 'அகில ப்ரபஞ்சமாய் ஆனதும் போராமல்' என்கிருள். அந்த மாயை அகில ப்ரபஞ்சமாய் ஆனது. அத்துடன் அது நிற்கவில்லை ! அதற்கு அதுமட்டும் போதவில்லையாம் ! அகண்ட ரஸத்தையும் தெரியவொட்டாமல் மறைத்துவிட்டதாம்.

சரணம் 1 :- இந்த மாயை ஜகத்தை ஈன்றது எப்படி ? ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணத்தினுல். மூன்று குணம் ஈன்ற ஜகத்திலே ஜீவர்கள் மோஹித்து விடுகிருர்கள், மூன்று வினையினுல்! மூன்று குணம், மூன்று வினை இது ஒருஜதை. இந்த ஜதை ஜீவர்களை பவ ஸாகரத்திலே முழுகிப் போக வைத்து விட்டது. (இந்தப் பாடலில் ஒவ்வொரு சரணமும் மூன்று மூன்று அடிகள் அமைந்துள்ளது நோக்கத்தக்கது.)

சரணம் 2 :- ''இந்த உலகம் தோன்றி மறையக் கூடியது; அஸத்; அதேபோல் இந்த உடல் நான் அல்ல; நான் பரம் பொருள்'' என்று தெரிந்தவர்களைக் கூட திகைக்கச் செய்யும் ஸாமர்த்தியம் உடையது அந்த மாயை என்று எண்ணி வியக்கிருள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

சரணம் 3 :- காண இயலாத உன்னை ஆயிரத்தில் ஒருவரே காணும் ஸாமர்த்தியத்தைப் பெற்றுள்ளனர். (மனுஷ்யாணும்—ஸஹஸ்ரேஷு—கீதை)

"ஸர்வமும் ப்ரம்மமாய் தான் தானே ஸர்வமாய்" ஆனால் ஒழிய உன்னை வெல்ல இயலாது; அப்படிப்பட்ட நிலையை அடைவிக்க எதனால் முடியும் என்றால் ஸத்குருவினுடைய கிருபை ஒன்றினால் தான் முடியும் என்பதில் என்ன ஐயம் இருக்க முடியும் ?

த்யான மூலம் குரோ: மூர்த்தம்
பூஜாமூலம் குரோர் பதம் ।
மந்த்ரமூலம் குரோர் வாக்யம்
முக்திமூலம் குரோ: க்ருபா ॥

சரணம் 4 :- பிறப்பிறப்பு இல்லா நிலையே முக்தி. பிறப்பும் இறப்பும் எதனால் ஏற்படுகிறது ? நன்மையான செயல் (ஸத்கர்மா) தீமையான செயல் (துஷ்கர்மா) ஸுகம், துக்கம் என்ற த்வந்தங்களாலே ஏற்படுகிறது.

இந்த த்வந்தங்கள் எதனால் ஏற்படுகிறது ? தன்னுடைய ஸ்வரூபத்தை மறந்ததினால் ஏற்படுகிறது. ஸத்குருவானவர் ஸ்வரூபத்தை நிரூபணம் செய்து "ஸர்வமும் ப்ரம்மமாய் தான் தானே ஸர்வமாய்" நிற்க கிருபையும் செய்கிறார். இவ்வாறு செய்யவும் ஞானமாகிற முக்தி உணரப் படுகிறது. உணரவும் த்வந்தங்கள் மறைகின்றன.

"இத்தகைய ஞானத்தை அடையவொட்டாமல் வெகு ஸாமர்த்தியமாக நீ நாட்டியம் ஆடுகிறாய்" என்று மாயையை நோக்கிப் பாடுகிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

எத்தகைய ஸாமர்த்தியத்தினால் அகண்ட ரஸம் தன்னை அது தெரியவொட்டாமல் மறைக்கிறது! வரும் வரிகளில் அதனை விளக்குகிறாள்.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை-23

(6-வது பாடல் தொடர்ச்சி)

அந்த மாயை அகண்ட ரஸம் தன்னை எப்படி மறைக்கிறது தெரியுமா ?

1. ஸர்வமும் ப்ரம்மமாய் தானே ஸர்வமாய் இருக்கும் நம்மை தான், பிறர் என்று எண்ண வைப்பதன் மூலம் அகண்ட ரஸம் தன்னை மறைக்கிறது.

2. 'ஜகத் அஸத்' என்று தெரிந்த பேர்களைக் கூட நான்குவித வர்ணங்களைக் காட்டி அகண்டரஸத்தை மறைக்கிறது.

3. அநாதியான பரப்பிரம்ம வஸ்துவான ஆத்மாவை தன்னுடைய ஸாமர்த்தியத்தினால் தாய், தந்தை, பந்துக்கள் முதலியவை உண்டென எண்ண வைத்து அகண்டரஸத்தை மறைக்கிறது.

இப்படியெல்லாம் அகண்டரஸத்தை அறியவொட்டாமல் மறைக்கும் மாயையை நோக்கி ஸ்ரீஆவுடையம்மாள் பாடுகிறாள்.

"சுவரில்லாத சித்திரம் எவ்விதம் அஸத்யமோ அதுபோல் உன்னுடைய ஸ்வருபமும் அஸத்யமே. ஆனாலும் உன்னுடைய விசித்ரமான செயல்கள் குறைவதுமில்லை. அழிவதுமில்லை. அதோடுகூட எவ்விதமான குறையும் இல்லாமல் உன்னுடைய செயல்களை நீ ஆற்றுகிறாய். இப்படி நீ ஆற்றும் செயல் எப்படி இருக்கிறது தெரியுமா ?" ஸ்ரீ ஆவுடையம்மாள் அதற்கு ஒரு உதாரணம் சொல்லி விளக்குகிறாள்:—

"ஸ்படிகத்தால் செய்யப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கிறது. அதற்குள்ளே ஒரு நாய். அது சும்மா நிற்கவில்லை. அங்குமிங்கும் ஓடி குலைத்துக் கொண்டிருந்தது. ஏனென்றால் அந்த நாயின் உருவமானது ஸ்படிகத்திலே பிரதிபிம்பித்தது. அதைக்கண்ட அந்த சுவானம் தன்னைத் தவிர வேறொரு நாய் அங்கு [illegible] நினைத்து அவ்வாறு ஒடுகின்றது.

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை-23

(6-வது பாடல் தொடர்ச்சி)

அந்த மாயை அகண்ட ரஸம் தன்னை எப்படி மறைக்கிறது தெரியுமா ?

1. ஸர்வமும் ப்ரம்மமாய் தானே ஸர்வமாய் இருக்கும் நம்மை தான், பிறர் என்று எண்ண வைப்பதன் மூலம் அகண்ட ரஸம் தன்னை மறைக்கிறது.

2. 'ஜகத் அஸத்' என்று தெரிந்த பேர்களைக் கூட நான்குவித வர்ணங்களைக் காட்டி அகண்டரஸத்தை மறைக்கிறது.

3. அநாதியான பரப்பிரம்ம வஸ்துவான ஆத்மாவை தன்னுடைய ஸாமர்த்தியத்தினால் தாய், தந்தை, பந்துக்கள் முதலியவை உண்டென எண்ண வைத்து அகண்டரஸத்தை மறைக்கிறது.

இப்படியெல்லாம் அகண்டரஸத்தை அறியவொட்டாமல் மறைக்கும் மாயையை நோக்கி ஸ்ரீஆவுடையம்மாள் பாடுகிருள்.

"சுவரில்லாத சித்திரம் எவ்விதம் அஸத்யமோ அதுபோல் உன்னுடைய ஸ்வரூபமும் அஸத்யமே. ஆனாலும் உன்னுடைய விசித்ரமான செயல்கள் குறைவதுமில்லை. அழிவதுமில்லை. அதோடுகூட எவ்விதமான குறையும் இல்லாமல் உன்னுடைய செயல்களை நீ ஆற்றுகிருய். இப்படி நீ ஆற்றும் செயல் எப்படி இருக்கிறது தெரியுமா ?" ஸ்ரீ ஆவுடையம்மாள் அதற்கு ஒரு உதாரணம் சொல்லி விளக்குகிருள்:—

"ஸ்படிகத்தால் செய்யப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கிறது. அதற்குள்ளே ஒரு நாய். அது சும்மா நிற்கவில்லை. ஏனென்றல் அங்குமிங்கும் ஓடி குலைத்துக் கொண்டிருந்தது. அந்த நாயின் உருவமானது ஸ்படிகத்திலே பிரதிபிம்பித்தது. அதைக்கண்ட அந்த சுவானம் தன்னைத் தவிர வேறொரு நாய் அங்கு உள்ளது என நினைத்து அவ்வாறு ஓடுகின்றது.

அதைப்போல மாயையெனும் ஸ்படிக மண்டபத்தில் அகண்டாஸமாகிய ஆத்மா நாமரூப நாட்டத்தால் பிரதிபிம்பித்து தன்னைத்தவிர உலகம் ஒன்று இருப்பதாக எண்ணி சாடி ஓடிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீ ஸத்குருவின் கிருபையினால் அல்லாது ஸர்வமும் பிரம்மமாய் ஆகி அகண்டாஸத்தை அனுபவிக்க முடியாது; ஸர்வமும் பிரம்மமாய் ஆனால் அல்லாது மாயையென்னும் ஸ்படிக மண்டபம் மறையாது.

" அகண்டரஸத்தை மறைத்து ஸ்படிக மண்டப சுவானம் போல் ஓடவைத்த மாயையே ! நீ உண்மையிலேயே அதிகஸாமர்த்யம் உடையவள் " என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறுள் அனுபவ ஞானியாகிய ஸ்ரீ ஆவுடையம்மாள்

(தொடரும்)

ஓ ஓ ஓ

குரு விருத்தம்

கி. நாராயணன், நாமக்கல்.

தினமும்கண பதிவேள்வி தொடர்புனித நீராட்டித்
 தோத்திரப் பூசை அமையும்
தொடர்ந்திடும் இராமனின் கிருஷ்ணனின்
 துய்யதாய் சிந்தை செய்தல் (நாமத்தைத்
மனத்தோடு வாய்ஒன்றி மறுமாற்றம் பிறிதன்றி
 மணிகள் பன்னிரண் டாகவே
மலர்வகைகள் பலசேர்த்து மாமேரு உள்ளிட்ட
 மற்ற தேவதைகள் பூசை
கனமான வாஞ்சா கல்பநு சைஎனும்
 கடிதான கரும நேரம்
கருமவினை ரோகங்கள் கடந்திட்ட
 கண்டிடக் கடுகி ஓடும் (நோய்நொடிகள்
தனமெங்கும் பெருகவே தருமங்கள் நிலைக்கவே
 தத்தா சிரமத்துள் உறை
தகைசாலும் தவவேள்வி தனைகட்டி
 நிலைகொண்ட
 தெய்வமே கிருஷ்ண குருவே.

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை-23

ராகம் : மோஹனம்

பாடல் : 7

பல்லவி

சொல்லப்படாத ஸுகத்தை
யனுபவத்தா லறிய வேணும் (சொல்லப்)

அனுபல்லவி

அல்லல் படுத்துகிற மனமே யிதுவென்று
காணப்படாது கண்டாய் (சொல்லப்)

சரணம்

1 அந்தகனால் நவரத்ன பரிக்ஷையறிய முடியப் போமோ
கோடிகிரந்தாவலோகனம் பண்ணினதினால் அகங்காரம்
தான் சாகுமோ
கோடி மந்திரங்களை ஜபித்தாக்கா லதனால் ஸமபாவனை
வருமோ
மணி மந்திரங்களானதோர் சித்தத்தில் விஞ்ஞானம்
ஸ்வப்பிரகாசமாகுமோ மனமே (சொல்லப்)

2 இருளையிரும்புலக்கையினா லடித்தோட்டினால் போகுமோ
ஒரு;:எருது உறந்து கறந்தாக்கால் அன்றெல்வாம்
பிள்ளைக்கு பாலாகுமோ
அவனியிலுண்டான கர்மமெல்லாம் செய்தாலதனால்
அவித்யை போகுமோ
தத்வப்பொருளை ஸ்வானுபூதியில்லாத சாஸ்திரத்தா
லறியப் போகுமோ மனமே (சொல்லப்)

3 கைநெல்லிக் கனியைக்காண கண்ணாடி பார்ப்பானேன்
மெய்யாபரணம் கழுத்திலிருக்க வீடெங்கும் தேடு
வானேன்
பொய்யானயிந்த பிரபஞ்சத்தை தூரபிடித்து
விடுவானேன்
எங்கும் சரியாய் நிறைந்த பரபிரம்மம் தானென்றறிய
அலைவானேன் மனமே (சொல்லப்)

4 காடாந்தகாரம் நிவாரணமாக்கி விளங்கும் பாஸ்கரனார்
மூடமதியை துலக்கியே வைக்கும் குருவெங்கடேசுவரனார்

தத்வபாடங்கள் சொல்லி பிரகாசமாக்கும் பரிபூர்ண
தேசிகனுர்
பவவாரிதி ஓடம் கடத்தியே வைக்கும் சரணத்தை
நன்ருய் பஜி மனமே (சொல்லப்)

ஸ்வானுபூதி அடையுமாறு தன் மனதை இப்பாடலில் வற்புறுத்துகிருள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

எழுதுவது, படிப்பது, கேட்பது, சொல்வது இவற்றை விட அனுபவம் என்பது தனித்ததாகும். கரும்பின் இனிப்பை எத்தனை வருணித்தாலும் அதனை அவரவர் ருசிக்கும் போதுதான் அதன் இயல்பு விளங்கும். (ஸ்ரீ ஆவுடையம்மாளின் பாடல்களும் இவ்விதம் ஸ்வானுபூதிப் பாடல்களே! அதற்கு எத்தனை விளக்கம் அளித்தாலும் அதனை அவரவர் தன்னிடம் பொருத்தி அனுபவிக்கும் போதுதான் அதன் ரஸம் விளங்கும் என்பது உண்மையல்லவா?)

ஆத்மானுபவம், ப்ரம்மானுபவம், ஸமபாவனை என்றெல்லாம் எத்தனை எழுதி, படித்து, கேட்டு, உபன்யஸித்தாலும் அனுபவம் என்பது மிகவும் கடினமான ஒன்று என்கிருள்.

"வாசித்துக் காணுெணுதது; பூசித்துக் கூடொணுதது; வாய்விட்டுப் பேசொணுதது; நெஞ்சினுலே; மாசர்க்குத் தோணுெணுதது; நேசர்க்குப் பேரொணுதது; மாயைக்குச் சூழொணுதது; விந்துநாத ஓசைக்குத் தூரமானது" என்று அருணகிரிநாதர் கூறும் 'அதனை' அல்லல் படுத்துகிற மனதால் எப்படி அறிய முடியும்? என்கிருள் அந்த அம்மாள்.

சுவாமி விவேகானந்தர் லண்டனில் பேசும்போது கூறினுர்:—

"வெறும் பேச்சிலோ, நூல்களிலோ, கொள்கைகளிலோ, சமயம் இல்லை என்பதை உணரவேண்டும். அது அனுபூதியிலேதான் உள்ளது. சமயம் என்பது வெறும் அறிவைப் பெறுவதில்லை; அனுபூதியே! எல்லாருக்கும் 'திருடுவது' கூடாது என்று தெரியும். அதனுல் என்ன பயன்? திருடாதவனே அதன் உண்மையை உணர்வான். இந்த அனுபூதி பெறுவது என்பது நிதானமான நீண்ட பாதை. இங்கே நாம் எல்லோரும் குழந்தைகளே! நாம் வயது முதிர்ந்தவர்களாய் இருக்கலாம்; உலகிலுள்ள எல்லா நூல்களையும் படித்திருக்கலாம்; ஆனுல் ஆன்மீகத்துறையில் நாம் எல்லோரும் குழந்தைகளே. இந்தத்

தெளிவான ஆன்மீகச்சக்திதான் சமயத்தைப் படைக்கிறது. பல தத்துவங்கள், கொள்கைகள் மூளைக்குள் நுழைந்திருந்தாலும் அவை யாதொரு பயனையும் அளிப்பதில்லை. 'நீங்கள் யார்? என்ன அனுபூதி பெற்றுள்ளீர்கள்?' என்பது மட்டும் தேவை.

சீரணம் 1 : 'கண்ணில்லாதவர்களால் நவரத்னத்தைப் பரிக்ஷை செய்யமுடியாதது போல் ஆத்மாவை அறிவினால் உணர முடியாது; ஏனெனில் அறிவு என்பது குருடே! (ஆத்மாவை அறிய ஆத்மாவையே சரணடைய வேண்டும்)'

'உடலே தான்' என்னும் 'அகங்காரம் இருந்தால் ஆத்மாவை உணர்ந்து இன்புற இயலாது. இந்த அகங்காரம் செத்தால் தான் 'அவனை' அறிய முடியும். 'கோடிக்கணக்கான நூல்களை நான் பார்த்தவன்' என்றால் அகங்காரம் எப்படிச் சாகும்?

மந்திரங்கள் ஜபித்தால் மனமானால் சுத்தமாகலாம். ஆனால் அதனால் ஸமபாவனை எப்படி வரும்? அனுபூதியினால் மட்டுமே ஸமபாவனை வரும் என்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

அழகான ஒரு குழை இருக்கிறது என்று கொள்வோம். அதற்குள்ளே எப்படி சூரியனுடைய வெளிச்சம் வரும்?

சித்தம் என்பது ஒரு அழகான குழை. அது மிக அழகாக இருக்கலாம். ஆனால் அங்கு விஞ்ஞானம் எப்படி ஸ்வ-ப்ரகாசமாகும்? என்று மிக நயத்துடன் தனது மனத்தை நோக்கிக் கேட்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள். (மணி என்றால் அழகு. மந்திரம் என்பதற்கு குழை, அரண்மனை என்றும் பொருள். மணிமந்திரங்களாலானது ஓர் சித்தம் — அழகான குழையான சித்தம்.) திருமூலரும்

"உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ?
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றி ருந்தான் புரிசடை யோனே!

என்று கூறுகிறார் அல்லவா?

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

நாகசுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை-23.

(7-வது பாடல் தொடர்ச்சி)

சரணம் 2 : இருள் நீங்கி ஒளிவீசுவதற்கு இருளை இரும்பு உலக்கையினால் அடித்து விரட்டிவிட முடியாது. ஒளி தோன்றினால் இருள் தானே மறையும். அக்ஞானம் நீங்க வேண்டுமானால் அதற்கு ஞானமாகிற ஒளி வீச வேண்டும்.

ஒளியில்லாத இடத்தை இருள் என்கிறோமே தவிர இருள் என்று ஒருவஸ்து தனியாக இல்லை. அதைப்போல் அக்ஞானம் என்று ஒருவஸ்து தனியாக இல்லை. தன்னை முழுமையாக அறிந்து கொள்ளாமல் காரியங்களில் பிரவேசிப்பதற்குப் பெயர்தான் அக்ஞானம்.

ஆத்ம ஒளியை அறிந்து கொள்ளாமல் அம்ருதத்வத்தை அடைய முடியாது. ஒருநாள் முழுவதற்கும் ஒரு சிசுவிற்கு வேண்டிய பாலை ஒரு எருதிடம் கறந்து விடமுடியாது. கர்மம், ப்ரஜை, தனம் இவற்றைத் தான் எருது என்று ஸ்ரீ ஆவுடையம்மாள் கூறுகிறாள் போலும்! அதனால்தான், உலகிலுள்ள கர்மங்கள் அத்தனையும் செய்தாலும் அவித்தை போகாது என்கிறாள். ஸ்ரீ பகவத்பாதாள் "பஜ கோவிந்தத்தில்" சொல்வதைப் போல, ஸ்வானுபூதியில்லாத சாஸ்திரங்களினால் தத்துவப் பொருளை அறிய இயலாது என்று கூறுகிறாள்.

சரணம் 3 : அப்படியெனில் அவித்தை நீங்க என்னவழி என்று கேட்கும் மனதிற்கு பதில் கூறுகிறாள் :-

கை நெல்லிக்கனியைப் பார்க்க கண்ணாடி தேவையில்லை. உண்மையான ஆபரணமாகிற சாந்தி நம் கழுத்திலேயே எப்போதும் இருக்க வெளியே தேடவேண்டியதில்லை. எல்லா இடங்களிலும் ஒரே அளவில் நிறைந்து நிற்கும் பரப்பிரம்மமாகிற தனதாத்ம ஸ்வரூபத்தை அறிய பொய்யான பிரபஞ்சத்தில் கிடந்து, மனமே! நீ ஏன் அலைகிறாய் ?

ஸ்வயம்பிரகாசமான ஆத்மா ஸத்குருவினால் நிருபணம் செய்யப்பட்டு என்றும் விளங்குகிறது. அப்படிப்பட்ட 'ஆத்மாபின்ன சித்சக்தியே நான்'' என்ற ஸதாகார பாவனையே சொல்லப்படாத சுகம். அது அனுபவம் ஒன்றினாலேயே அறியப்படுவது. அப்படிப் பட்ட ஆனந்தம் என்றும் நம்மிடம் விளங்குகின்றபோது அதை [illegible] என்ன செய்துதான் என்ன ?

சரணம் 4 : என்னுள் இருக்கும் உண்மையான ஆனந்தத்தை உணர்ந்து கொள்ள முடியவில்லையே என்று நீ கேட்பாயானால் மனமே! உனக்கு ஒருவழி சொல்கிறேன் கேள் :-

'' ஸத்குரு சரணத்தை நன்றாய் பஜி மனமே! ''

அந்த சரணம் எப்படிப்பட்டதெனின், காடுபோன்று அடர்ந்த அக்ஞானமாகிற அந்தகாரத்தை நிவாரணம் செய்வதில் சூரியனைப் போன்ற பிரகாசம் உடையது.

மூடமதியைத் துலக்குவதில் குரு வெங்கடேசுவரரைப் போன்றது.

தத்வ பாடங்களைச் சொல்லி ஞான ப்ரகாசத்தை விளங்க வைப்பதில் பரிபூர்ணமானது.

ஸம்ஸாரமாகிற கடலில் ஜீவனாகிய ஓடத்தை கடத்தி வைக்கும் திறனுடையது.

'' அப்படிப்பட்ட உயர்ந்த பெருமையையுடைய ஸத்குரு சரணத்தை பஜித்து சொல்லப்படாத ஸுகத்தை அனுபவத்தால் அறிவாய் '' என்று கூறி இந்தப்பாடலை நிறைவு செய்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்கள்

(விளக்கவுரை : நாகசுந்தரம் —
S/o. அருட்சக்தி நாகராஜன், சென்னை)

பாடல் - 8

ராகம் : சங்கராபரணம்

பல்லவி

சேர்வதும் எப்படியோ ஸ்ரீ ஸத்குருபாதம்
சேர்வதும் எப்படியோ (சேர்)

அனுபல்லவி

மங்களமான மஹாராஜ ஸ்ரீகுரு
மலையாசலம் வந்து மஹிமை யறியவென்று
இங்கிதமாகவே எடுத்து உரைத்திடும்
மங்களமாகவே கேட்டு புகழ்ந்திட (சேர்)

சரணம்

1. அன்னை கருக்குழியை கடத்தி வெளியில்
வந்து சொல்லப்படாத துக்கத்தை அனுபவித்து
வெல்லப்படாத மஹத்துக்கள் சரணத்தை
காணப்படுமிந்த கருத்துக்குள் அறிவை (சேர்)

2. அஞ்ஞானகாயம் அழுக்கை விளக்கியே
அந்தகாரமான மாயை துலக்கியே
பிரக்ஞானமான பிரகாசம் ஜ்வலிக்கவே
பரபிரம்ம ஸ்வரூபத்தை பார்த்து பணியவே (சேர்)

3. வலைக்குள் அகப்பட்டு தயங்கு மத்ஸ்யம்போல்
ஸம்ஸார துறையிலே ஸுஷுப்திபோல் முழுகாமல்
நிவ்ருத்திக்கரையில் நின்று நினைவை தெளியவைத்து
நிர்குண பிரம்மத்தை நிலையாக நியுத்தியே (சேர்)

4. ஸ்ரீ வேங்கடேசுவர குருவை யனுதினம்
பாதார விந்தத்தல் பணிந்திடு வாயே
பரமகுருவின் பாதம் பணிந்திருப் பாயானால்
நித்யானந்த ஸுகம் அனுபவிப் பாயே. (சேர்)

ஸ்ரீ ஸத்குருவின் பாதாரவிந்த மஹிமையைப் பற்றி இந்தப் பாடலில் ஸ்ரீ ஆவுடையம்மாள் கூறுகிறாள்.

''நமது மனம் சலித்துக்கொண்டேயிருக்கிறது. எவ்வளவு துக்கத்தை அனுபவித்தாலும் அனாத்ம வஸ்துக்களில் நாட்டம் குறைவதில்லை. பலவித விஷயங்களில் அடிக்கடி போய்விழும் மனதை ஒரே விஷயத்தில் நிறுத்தி கட்டுப்படுத்தினாலொழிய அதனை நமது கட்டுக்குள் கொண்டுவருவது இயலாது. வாஸனைகள் ஒழிந்தால்தான் தத்வஞானம் ஏற்படும். தத்வஞானம் ஏற்பட்டால்தான் மனம் நாசமாகும். மனோ நாசமாவதே முக்தி'' — இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் நமக்குத் தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் அது அனுபவபூர்வமாக ஏற்படவேண்டுமே! அதற்கு நம்முடைய ஸாமர்த்யம் எதுவும் பயன்படாது. ஸ்ரீ ஸத்குருநாதாளுடைய பாதம் சேர்வதுதான் அதற்கு ஒரே வழி என்கிறாள்.

அந்த ஸத்குருபாதம் சேர்வதும் எப்படியோ? அதைத்தான் இந்தப் பாடலில் விளக்குகிறாள்.

ஸ்ரீ ஸத்குருநாதர் மங்களமான மஹாராஜர். அவர் எடுத்துரைக்கும் உபதேசங்களும் மங்களமானவை. மங்களம் என்றால் சிவம். அவரும் சிவம். அந்த சிவமான மங்கள நிலையில் நாமும் இருக்கவேண்டுமானால் அதற்கு சிவமான ஸத்குரு பாதத்தை சேர்வதே வழி.

சரணம் 1 : '' நாம் வந்த வழியோ அன்னை கருக்குழி. இருக்கும் இடமோ சொல்லப்படாத துக்கத்தை கொடுக்கும் ஸம்ஸார ஆழி.'' — இத்தகைய நிலையில் தாபத்ரயத்தில் வெந்துகொண்டிருக்கும் ஜீவனுக்கு — '' மஹாதுக்கள் சரணத்தை அந்த ஆழியினால் வெல்லமுடியாது; காணும் இந்த பிரபஞ்சம் உண்மையில் சின்மயமான் அறிவே என்று இங்கிதமாக எடுத்துரைக்கும் மலையாசலம் * வந்த ஸத்குருவை புகழ்ந்து நின்றிட ஸ்ரீ ஸத்குரு பாதத்தைச் சேர் '' என்கிறாள்.

சரணம் 2 : ஓ! மனமே! ஸ்ரீ ஸத்குரு பாதத்தை ஏன் சேரவேண்டுமென திரும்பவும் கேட்கிறாயா? சொல்கிறேன் கேள் :

ஸ்ரீ ஸத்குருவின் பாதம் சேர்ந்தாயானால் ''பொய்த் தோற்றமாகிற அழுக்கு நீங்கிவிடும். அறியாமை இருள் அகன்றுவிடும். நிறைந்த அறிவாகிய ஒளி ஜ்வலிக்கும். என்றும் ஆனந்தமாக விளங்கும் பரப்ரும்ம ஸ்வரூபமே எங்கும் உனக்குத் தோன்றும்.'

ஸ்ரீ ஸத்குருபாதம் சேர்ந்தவுடனேயே த்யான யோகமும் கைகூடி விடுகிறது.

யோகத்தில் ஊன்றிய மனமுள்ளவனின் நிலையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் இவ்விதம் விளக்குகிறார் :

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः॥ (6-29)

ஸ்ரீ ஸத்குருபாதம் சேர்ந்தவுடன், 'எங்கும் சம நோக்க முடையவனாய் ஆத்மாவை எல்லா பொருளிலும் உறைவதாகவும் எல்லாப் பொருட்களும் ஆத்மாவிடத்து உறைவதாகவும் காண்கிறான்' என்கிறாள் ஆவுடையம்மாள். அதாவது ப்ரக்ஞான கனமான ஆத்ம ப்ரகாசம் ஜ்வலிக்க எங்கும் பரப்ரும்ம ஸ்வருபத்தை பார்த்து பணிகிறான்.

(தொடரும்)

---

* மலையாசலம் : [redacted] செங்கோட்டை ஆற்றங்கரைத் தெருவில் ஸ்ரீ ஆவுடையம்மாள் வசித்து வருகையில்தான் திருவிசநல்லூர் அய்யாவாளான ஸ்ரீ வேங்கடேசவர ஸத்குருவின் உபதேசத்தைப் பெற்றாள்.

ॐ

PRANAMS TO

SRILASRI AVADHUTA

KRISHNANANDA BRAHMENDRA

SWAMIGAL OF SENDAMANGALAM.

PRANAMS TO ALL ATMAN.

With Courtesy From :

'A. JEEVATMAN'

the existence of God; the concept of the world will disappear altogether. The saints have declared — if you accept the world as non-existent, you will experience Him who always exists and this thought to be attainable. This is the essence of the whole thing. Accept it from the bottom of your heart. Everyone has experienced that the situations, circumstances, incidents, things and companions of the past are no more with us; they have passed away. Similarly, the present situations, incidents etc. will also pass away because this is a continuous process.

It is the tradition of the world that all the things and persons etc. have either passed away or are in the process of passing away; no one remains permanently.

Right from the beginning it is every one's experience that the world does not stand still even for a moment. We do not give importance to this experience; this is our mistake. Hence, we have to face the cycle of birth and death again and again. Therefore, accept the fact today itself that the world is passing away every moment. This is the gist of the matter.

The path that the Guru has pointed out, you must try to follow. Do not stay idle; make an effort to go forward. And if you like to work, do it in the spirit that every thing is an expression of That. Service may be of the country, of your wife as the presiding goddess of the house, of your children as Gopala or Kumari, of your husband as the Lord — for it is the ONE who appears in many forms. Do not pass your time merely with eating and sleeping. The invaluable boon of human birth must not be wasted in vain thought.

— Sri Sri Ma Anandamayi

11/94
62

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்கள்

(விளக்கவுரை : நாகசுந்தரம் —
S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை)

பாடல்—8 (தொடர்ச்சி)

சரணம் 3 : இவ்விதம் ஸத்குரு பாதத்தில் சேர்ந்ததினால் நிர்குண பிரம்மத்தில் மனம் நிலையாக நிற்கிறது. இதுதான் 'ஸம்ஸார ஸாகரத்தின் நிவ்ருத்திக் கரை' என்று கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள், ஸத்குருபாதம் சேர்வதற்குமுன் ஜீவனுடைய நிலையைக் கூறுகின்றாள் இந்த சரணத்தில்.

வலைக்குள்ளே அகப்பட்ட மீன் எவ்விதம் தவிக்குமோ அவ்விதம் தனது இயல்பாகும் நிர்குண ஸ்வரூபத்தை மறந்து ஜீவன் தவிக்கிறான்.

ஆனந்த ஸாகரத்திலிருந்து அவித்தையாகும் வலைக்குள் ஜீவனாகி தயங்குகிறான் என ஸ்வஸ்வரூபத்தை ஸாகரத்திற்கு அல்லது நீர்நிலைக்கு ஒப்பிட்ட ஆவுடையம்மாள் அடுத்த வரியில் ஸம்ஸாரத்தை துறையாகவும் ஸுஷுப்தியை அந்த துறையிலே முழுகுவதாகவும் உருவகப்படுத்துகிறாள்.

ஆனந்தமாகிற ஸாகரத்திலே அமிழ்ந்துகொண்டிருக்கும் போது ஸுகமே அங்கு மிஞ்சுகிறது.

ஸம்ஸாரமாகிற துறையில் அவித்தையால் முழுகாது நிவ்ருத்திக் கரையில் நின்று நினைவைத் தெளியவைத்து நிர்குண பிரம்மத்தில் நிலைநிறுத்துகின்றபோதும் ஸுகமே மிஞ்சுகிறது.

அந்த ஸுகத்தை உணர ஒரேவழி ஸ்ரீ குருவை அனுதினமும் பணிவதுதான். **"பரமகுருவின் பாதம் பணிந்தால் நித்தியானந்த ஸுகம் அனுபவிப்பாய்"** என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

பாடல்—9

பல்லவி (ராகம்: முகாரி

எங்குமாக ஏன் அலைகிறாய் மனமே
எண்ணமற்ற யிடத்திலே நீ நிலைத்திராய் (எங்கு)

அனுபல்லவி

சாடியோடியே வருவாய் காடு மேயாதே மனமே
தேடி பாராய் ஸத்குருவை மோடியாகவே தினமே (எங்கு)

சரணம்

1 கல்பகாலம் ஞானமில்லாமல் கர்மம் செய்தால்
துக்க ஹேது ஜன்மம் போகாது
அல்பகாலம் பிரம்ம மகிமென்றேயிருந்து பார்த்தால்
அப்புரம் ஜன்மம் வாராது
கெர்ப யாதனை தொடங்கி கிழமாய் விழும் தன்னிலும்
ஸ்வல்பமானுலுமதில் ஸுகமுண்டோ
ஆகையாலே (எங்கு)

2 பஞ்ச பூதத்தால் முடைந்த பாண்டத்தைப் பார்த்தால்
நெஞ்சும் மனமும் குமட்டிவரும்
ரஞ்சிதமென் றெண்ணுதே அதை தோலாலே போர்த்தி
வஞ்சனையாய் மூடியிருக்கும் அஞ்சகோசத்தை
பிரித்து
பஞ்சு போலே பறக்கடித்து கோச பாவனையைவிட்டு
மிஞ்சினதாய் நீ இருடா (எங்கு)

3 லிங்கதேகம் வசம்பண்ணியே நிர்மலமாக
அஹம் பிரம்மாஸ்மி என்று நீ இராய்
கங்கு கரையற்ற ஆனந்தக் கடல்தன்னில்
முங்கி யனுபவித்தே பாராய்
வெட்கமில்லையோ உனக்கு வம்பு வீணளப்பதற்கு?
அங்கமற்ற ஆத்மஸுகம் நிரம்பவே
யிங்கிருக்க (எங்கு)

4 காடாந்தகாரமற்று நீயிராய் சுகாஸனத்தில்
ஏகாந்த ஸ்தலத்தில் நீயிராய்
வெளியில் வாக்யார்த்த த்ருஷ்டி அதனால்
வஸ்துவிடத்தில் நீ நிலைத்தேயிராய்
ஜோதிர்மயமானவரை சுத்தபரி பூரணரை
ஸ்ரீமத் வெங்கடேசுவரரை சிந்தையில்
தியானம் செய்வாய் (எங்கு)

தியான யோகத்தைப் பற்றி இந்தப் பாடலில் ஸ்ரீ ஆவுடை அம்மாள் கூறுகின்றாள்.

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்றார் தாயுமானவர்.

"கீழே கொட்டின கடுகைப் பொறுக்கி எடுப்பது வெகு சிரமம். அதுபோல பல திசைகளிலும், பல விஷயங்களிலும் சிதறுண்ட மனதை ஒருமுகப்படுத்துவது எளிதன்று" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இந்தப் பாடலின்மூலம் அத்தகைய கடினமான செயலை யுக்தி சொல்லி எளிதாக்குகின்றாள் ஸ்ரீ ஆவுடையம்மாள். அடுத்த இதழில் விளக்கத்தை அனுஸந்தானம் செய்வோம்.

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்கள்

(விளக்கவுரை : நாகசுந்தரம் —
S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை)

பாடல்—9 (தொடர்ச்சி)

பல்லவி & அனுபல்லவி :

தன் மனதைப் பார்த்து ஸ்ரீ ஆவுடையம்மாள் பாடுகிறாள், " ஓ! மனமே! நீ ஏன் அங்கும் இங்கும் அலைகிறாய்! ஸத்குருவின் திருவடியில் அதாவது எண்ணமற்ற இடத்திலே நீ நிலைத்து நிற்பாயாக ! " என்று.

ஓர் ஒப்புமை.

ஜனக மஹாராஜாவிற்குப்பின் உலகத்தில் புகழ்பெற்ற இரண்டு இராஜ ரிஷிகள் இருந்தனர். ஒருவர் பரத கண்டத்தை ஆண்ட அசோகர். மற்றொருவர் மேல் நாட்டில் ரோம ராஜ்யத்தை ஆண்ட மார்க்க அரேலிய சக்ரவர்த்தி. இவர் அசோகருக்குப்பின் சுமார் 400 வருஷங்களுக்குப் பின் கி.பி. 161 முதல் 180ம் வருஷம் வரை ஆட்சி புரிந்தார். அவர் அவ்வப்போது தனக்குள் தோன்றிய எண்ணங்களைத் தன் மனோநிலையை திடப்படுத்திக்கொள்ளுமாறு தனக்குத்தானே உபதேசிக்கும் முறையில் பல குறிப்புகளை எழுதி வந்தார். அது **ஆத்ம சிந்தனை** என்ற நூலாக தொகுக்கப்பட்டு உலகிலுள்ள முக்கியமான பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இராஜாஜியினால் தமிழிலும் அந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஞானிகள் என்பவர் உலகில் எங்குவேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பது அவரது நூலைப் படிக்கும் போது நமக்குப் புலனாகிறது. **ஸ்ரீ ஆவுடையம்மாள் தனது மனதிற்கு ஆணையிடுவதுபோல அந்த மார்க்க அரேலியப் பேரரசரும் தனது மனதிற்கு ஆணையிடுகிறார்.** அவர் தனது மனதை நோக்கிக் கூறுகிறார், கேளுங்கள் :

" ஏ ! மனமே ! கேள் : உனக்கு உள்ள காலம் மிகக் குறைவு. அதை வீணாக்க வேண்டாம். உலகத்துக்கு ஏதேனும் ஒரு செயல்செய்ய அந்தக்காலம் பயன்படுமாயின் சரி. இல்லாவிடில் அயலாரைப் பற்றி சிந்தனை செய்துகொண்டு காலத்தை வீணாக்க

வேண்டாம்! அவன் என்ன செய்கிறான்? இவன் என்ன செய்கிறான்? அதை ஏன் அவன் செய்கிறான்? இவன் என்ன நினைக்கிறான்? அவன் உள்ளத்தில் என்ன எண்ணம், என்ன சூழ்ச்சி? இவைபோன்ற கவலைகளைக்கொண்டு, தத்தம் ஆத்ம சுத்தியை மறந்துவிட்டு, மற்றவர்களைக் குறித்தே வீணாக்க வேண்டாம்! பயனில்லாமல் எதேச்சையாக மனம் செல்லுவதை தவிர்க்க வேண்டும். அதிலும் தீய எண்ணங்களை அறவே ஒழித்தல் வேண்டும். திடீரென்று ஒருவர், 'நீ என்ன இப்போது உன் மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே 'இதை நினைத்தேன். இது என் மனதிலுள்ள எண்ணம்' என்று எளிதில் சொல்லக்கூடியவாறு மனதை சுத்தமாக வைத்துக்கொள்வாயாக! பிறருக்கு சொல்லத்தகாத எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும். எந்தக்காலத்திலும் உன் உள்ளம் உள்ளது உள்ளபடி பலர் அறிய வெளிப்பட்டாலும் அதில் வெட்கப்படக்கூடியது எதுவும் இல்லாதபடி வைத்துக்கொள்வாயாக!''

மனம் ஒருநிலைப்பட்டு த்யானத்தில் நிலைக்க, நமது வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளின்போது எவ்விதம் செயல்படவேண்டும் என்று மார்க்க அரேலியஸ் கூறுவது சிறப்பானது.

''ஓ மனமே! நான் கூறுவதைக் கேட்பாயாக! 'ஐயோ! என் துர்பாக்கியம்! இந்த விபத்து எனக்கு வந்ததே!' என்பாய். அப்படியல்ல நீ எண்ண வேண்டியது! 'ஆ! இத்தகைய விபத்து நேரிட்ட போதிலும் நிகழ்வதைக் கண்டு கலங்காமலும், வருவதை நினைத்து அஞ்சாமலும் தீரத்துடன் இருக்கின்றேனே! நான் என்ன பாக்யவான்! இதைப் போன்ற கஷ்டம் யாருக்கும் வரலாம்; ஆனால் எல்லோரும் என்னைப்போல் தீரத்துடன் தாங்க மாட்டார்கள். வந்தது விபத்தேயாயினும் எனக்கு வாய்ந்த மனோநிலை நல்ல பாக்யம் அன்றோ!' என்று எண்ணி சந்தோஷப்படுவாயாக. மனிதனுடைய உள்ளத்தைப் பழுதுபடுத்தாத ஒரு சம்பவம் எப்படி விபத்தாகும்? **வாழ்வின் நோக்கம் கெடாத வரையில் எது நேர்ந்தால் என்ன?** எந்தப் பொருளை நீ இடைவிடாமல் சிந்திக்கிறாயோ அவற்றின் தன்மையை உன் மனம் அடைகிறது, சாயத்தில் தோயும் துணியைப் போல. (யத்பாவம் தத் பவதி).''

''நான் எங்கே போனால் என்ன? எங்கிருந்தால் என்ன? **என் உள்ளத்திலிருக்கும் தெய்வம்** என்னைவிட்டு நீங்காது.''

மனம் ஏன் ஒருநிலைப்படுவதில்லை ? அது பல விஷயங்களில் செல்லுவதால்தான். அதைத்தான் ஸ்ரீ ஆவுடையம்மாள் 'காடு மேயாதே' என்கிறாள். அவ்விதம் செல்லும் மனதை எளிதில் தூய்மையாக செய்வது எப்படி ?

மார்க்க அரேலியஸ் தனது மனதிடம் கூறுகிறான் பாருங்கள் :

"வெள்ளரிக்காய் கசக்கிறதா? எறிந்து விடு. வழியில் முள்ளா ? அந்த வழியை விட்டு சற்று நீ தள்ளிப் போ, போதும். அதை விட்டு, 'இப்படி கசக்கும் காய் ஏன் இருக்கிறது ? முள் எதற்காக உலகத்தில் தோன்றியது ? என்ற கேள்விகள் கேட்காதே ! ஒரு உதாரணம் சொல்கிறேன் கேள். மரத்தச்சு அல்லது தோல் வேலைப் பட்டறையில் ஒருவன் போய், 'இங்கே எதற்காக இவ்வளவு குப்பையும் உபயோகமற்ற துண்டுகளும், மரச் சீவல்களும்' என்று சொன்னால் சிரிப்பார்கள் அல்லவா? அதுபோல் பிரகிருதியை ஆராய்ந்து அறியும் ஞானிகள் (இறைவனின் படைப்பை குறை கூறும்) உன்னைக் கண்டு சிரிப்பார்கள். தச்சனுக்கு தன் வேலைக்கு உதவாத குப்பையைப் போட இடமுண்டு. ஆனால் உலகத்துக் குப்பையைப் போட உலகத்தைத் தவிர வேறு இடமில்லை அல்லவா ? ஆனால் இறைவனின் அதிசயத்தைப் பார் ! போட இடமில்லாத தன் குப்பையையும்கூட புதிய புதிய பொருள்களை உண்டு பண்ணி பயன்படுத்திப் பழையனவற்றையும் புதியனவாக்கி, முதுமையை இளமையாக்குகிறது ! எனவே எல்லா பொருட்களும் தூய்மையானவையே !"

'எண்ணமற்ற இடத்திலே நீ நிலைத்திராய் ! சாடியோடியே காடு மேயாதே மனமே ! வானொத்த வெங்கடேசுவர சத்குருவைத் தேடிப் பாராய்' என்று ஸ்ரீ ஆவுடையம்மாள் கூறுகின்றாள் பல்லவியில்.

"எங்கும் பரவியிருக்கும் காற்றை சுவாசித்து வாழ்ந்தால் மாத்திரம் போதாது. எங்கும் பரந்திருக்கும் சித் பொருளையும் உட்கொண்டு வாழ்வாயாக" என்று கூறுகிறார் மார்க்க அரேலியஸ்.

எனவே, ஸ்ரீ ஆவுடையம்மாளின் இந்தப் பாடல் வரிகள் ரோமாபுரிச் சக்ரவர்த்தியின் நூல் முழுவதும் ஒப்பிடுமாறு அமைந்துள்ளது வியக்கத்தக்கது !

கைவல்லிய நவநீத பாடல் ஒப்புமையுடன் சரணத்தை அடுத்த இதழில் ஸ்ரீ ஸத்குரு அருளால் அநுஸந்தானம் செய்வோம்.

(தொடரும்)

தேவர்க் கிடர்விளைத்த தீயோரைப் போர்தொலைத்து
மூவுலகும் காத்தவனை முன்னு. (14)

குறிப்புரை : தீயோர் — சூரபன்மன், சிங்கமுகாசுரன், பானுகோபன் முதலிய அவுணர்கள்.

மயிலுமுயர் சேவலுமாய் மாற்றியந்தச் சூரனையே
செய்வித்தான் தன்னடிக்கீழ்த் தொண்டு. (15)

குறிப்புரை : முருகன் சூரபன்மனைத் தன் வேலை எறிந்து அவன் உடலை இரு கூறு செய்தபோது அவை சேவலும் மயிலுமாக உருப்பெற்றன. முருகன் கோழியைக் கொடியாகவும் மயிலை ஊர்தியாகவும் கொண்டான்.

ஞானமிகு தந்தைக்கு நான்மறையின் உட்பொருளை
ஊனமறச் சொன்னவனை உன்னு. (16)

குறிப்புரை : முருகன் தந்தை சிவபெருமானுக்கும் பிரணவத்தை உபதேசித்தார். அதனால் 'சாமிநாதன்' என்ற பெயர் அவருக்கு அமைந்தது. ஊனம் அற — சிவபெருமானின் குறைநீங்க.

அடைமின்! அடைமின்கள்! ஆறுமுகன் தாளை
உடைமின்றும் ஊழ்வலியை உற்று. (17)

குறிப்புரை : ஆறுமுகனின் தாளை அடைந்து ஊழ்வலியை உடைத்து எறியுங்கள்.

வேத விழுப்பொருளை விண்ணோர் அறிவரிய
நாதவடி வானவனை நாடு. (18)

குறிப்புரை : இறைவன் ஆதியில் நாத (ஒலி) வடிவாக இருந்தே பின்னர்ப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தார். "நாத விந்து கலாதி நமோ நமோ" என்பது காண்க.

சிந்தா குலம்தீர்ந்து சீர்மையுற வேண்டுமெனில்
கந்தனே தஞ்சமெனக் காண். (19)

குறிப்புரை : சிந்தாகுலம் — மனக்கவலை.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்கள்

(விளக்கவுரை : நாகசுந்தரம் —
S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை)

பாடல் — 9 (தொடர்ச்சி)

சரணம் 1 : இந்த மனமாகிற குரங்கு தோன்றி மறையக் கூடிய விஷயங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அதுதான் ஸுகம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறது. நிஜமாகவே இருக்கிற ஒன்றை அது பிடித்துக்கொண்டிருந்தால் பரவாயில்லை. ஆனால் அதுவோ இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக்கொண்டு அதுவே சதம் என்றும் எண்ணிக் கொள்கிறது. இந்த எண்ண அலைச்சல் நிற்க வேண்டும். இல்லாத ஒன்றில் பிடிப்பு விடுவதற்கு திரும்பவும் வேறு ஒன்றில்— இல்லாத ஒன்றையே — பிடித்துக்கொள்வதில் என்ன பயன்? இருக்கிற வஸ்துவை அறிந்து பிடித்துக்கொண்டால் அதுதான் ஞானம். " இத்தகைய ஞானமில்லாமல் கற்பகாலம் கர்மம் செய்தால் துக்க ஹேது ஜன்மம் போகாது " என்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள். " இல்லாத வஸ்துவை கற்பகாலம் பிடித்துக் கொள்வதைவிட இருக்கிற வஸ்துவை அற்பகாலம் பிடித்துக் கொண்டால் அப்புறம் ஜன்மம் வராது " என்ற பாடல் வரிகள் கைவல்ய நவநீதச் செய்யுளுடன் ஒப்பிடுமாறு அமைந்துள்ளது அந்தச் செய்யுள் :

" வேடமாறிய பேர்களையறிய வேண்டினுன்
மகனே கேள் !
கூடமாமவர் சுபாவங்கள் சீலங்கள்
குறிகளாய்ந் தறியாமல்
ஓடியுங் குதித்துந் தலைகீழ்நின்று முயர்ந்த
கம்பத்தேறி
ஆடியும் பல கருமங்கள் செய்யினுமவ
ருண்மை தெரியாதே. "

சரணம் 2 : ஓ! மனமே! ' ரஞ்சிதம் ' என்று நினைத்துக் கொண்டு இந்த உடல் நினைவாகவே ஸதாகாலமும் எங்கும் அலைந்துகொண்டிருக்கிறாயே! எண்ணமற்ற இடத்திலே நிலைத்து நிற்கச் செய்வதான ஸத்குருவின் சரணாரவிந்தத்தையே எப்போதும் த்யானம் செய் என்று சொன்னால் நீ கேட்கமாட்டேன் என்கிறாயல்லவா ? நீ ரஞ்சிதம் என்று நினைத்துக்கொண்டிருக்கும்

இந்த உடல் எப்படிப்பட்டது தெரியுமா? கூறுகிறேன் கேள்: இந்த சரீரம் பஞ்சபூதத்தால் முடைந்த பாண்டம். இதைப் பார்த்தால் நெஞ்சும் மனமும் குமட்டி வரும். அஞ்சு கோசங்கள் இதை வஞ்சனையாய் மூடியிருக்கும். இந்த ஐந்து கோசங்களையும் பஞ்சுபோல பறக்கடித்து கோச பாவனையை விட்டால் மிஞ்சின வஸ்துவாக 'நீ' இரு! என்று ஆணையிடுகிறாள். இந்த மிஞ்சிய 'நான்'தான் பராபராதி ரகஸ்யம்.

சரணம் 3: மனம் நிர்மலமாக இருந்தால்தான் இந்த ரகஸ்யம் புலப்படும். இந்த மனமாகிற கண்ணாடி அழுக்கு நிறைந்ததாக இருந்தால் அதில் 'சித்' பிரஹாசிக்காது. இந்த மனம் அழுக்கடைய காரணம் லிங்க தேஹம்தான். பஞ்சேந்திரிய குதிரைக் கூட்டமானது (மனமாகிற கடிவாளத்தை இறுக்கிப் பிடிக்காததனால்) தறிகெட்டு ஓடுகின்றன. கடிவாளத்தை இறுகப் பிடித்து லிங்கதேஹத்தை வசம் பண்ணினால் மனம் நிர்மலமாக ஆகும். அந்த நிர்மலமான மனதால்தான் நான்கு வேதங்களாகிற தூண்களை உடைய மண்டபத்தின் மத்தியில் உபநிஷத் ஆகிற ஊஞ்சலில் ஆத்மானுபூதி என்கிற ஆட்டத்தை ரஸிக்க முடியும். அப்படிப்பட்டதாக அந்த மனது ஆனால் கங்குகரையற்ற ஆனந்தக் கடலில் முங்கி அனுபவிக்க முடியும். "விசுத்த புத்தே: பரமாத்ம வேதனம்" என்பது சாஸ்த்ரம். பரமானந்தக் கடலில் முங்கி அனுபவிக்க வேண்டுமானால் ஓ! மனமே! நீ எங்குமாக அலையாதே! முக்கியமாக ஒரு விஷயத்தை கவனித்துக் கொண்டிருக்கும்போது வீணாக வம்பு வளர்த்தால் "உனக்கு வெட்கமில்லையா" என்று கேட்கிறோம். ஸ்ரீ ஆவுடையம்மாள் தன் மனமாகிற நண்பனை இவ்விதம் கண்டிக்கிறாள்:

"அங்கமற்ற (இப்படிப்பட்டதென்று உருவம் கொடுக்க இயலாத) ஆத்ம ஸுகமானது இங்கு நிறைந்து இருக்கின்ற போது, வெட்கமில்லையோ உனக்கு வம்பு வீண் அளப்பதற்கு?"

சரணம் 4: இந்த ஆத்ம த்யானத்தை எவ்வாறு செய்வது என்பதைக் கூறுகின்றேன் கேள்:

காடாந்தகாரமற்று நீ இருக்க வேண்டும். அதாவது அறியாமையாகிற இருளற்று நீ இருக்க வேண்டும். அப்போது மனதில் ஒருவிதமான சுகம் ஏற்படும். அந்த சுகாஸனத்தில் நீ அமர்ந்து கொள். அந்த ஆஸனத்திற்கருகில் விஷயங்களாகிற பிறரை நீ அண்டவிடாதே! நீ ஏகாந்தமாய் இருப்பாயாக! வாக்யார்த்த த்ருஷ்டி (சொற்களின் வெளிப்படையான அர்த்த

நோக்கு) உனக்கு புறம்பாக வெளியில் இருப்பதில்தான் ஏற்படும். லக்ஷிய வஸ்து ஆத்மாதான். அந்த வஸ்துவிடத்தில் நீ நிலைத்து இருப்பாயாக. அந்த எல்லாவற்றிற்கும் லக்ஷியமாயுள்ள ஆன்மா எப்படி உள்ளது தெரியுமா? அது ஜோதிர்மயமாக உள்ளது; சுத்த பரிபூரணமாக உள்ளது. ஜோதிர்மயமாகவும் சுத்த பரிபூரணமாயும் உள்ளவர் ஸத்குருவான ஸ்ரீமத் வெங்கடேசுவரர். அவர்தான் ஆன்ம ஸ்வரூபமாகவும் உள்ளவர். எனவே, அவரை த்யானம் செய்தால் ஆன்மாவை த்யானம் செய்வதாகத்தான் ஆகும். ஏனென்றால் ஸத்குரு, மந்த்ரம், தேவதை இம்மூன்றும் ஒன்று என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஞாத்ரு ஞான ஞேய அபேத பாவனைதான் ப்ரும்மஞான அடைவு என்பது உபநிஷத் கூற்று. எனவே, ஓ! மனமாகிற வண்டே! நீ எப்போதும் ஆத்மாவிற்கு அபேதமாயுள்ள ஸ்ரீஸத்குரு சரணகமலத்திலேயே மூழ்கி இருப்பாயாக! மேலும் கூறுவதற்கு என்ன இருக்கிறது? "எண்ணமற்ற இடத்திலே அதாவது ஆனந்தக் கடலில் நீ எப்போதும் மூழ்கி இரு" என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறாள் ஸ்வானுபூதி நிறைந்த ஸ்ரீ ஆவுடையம்மாள்.

(தொடரும்)

ஸ்ரீ தத்தாசிரம செய்திகள்

20—4—92 அன்று சங்கடஹர சதுர்த்தி வழக்கம்போல் காலையில் 1008 பத்ம ஹோமத்துடனும், மாலை மஹந்யாஸம், க்ஷிப்ர கணபதிக்கு விசேஷ அபிஷேகம், அலங்காரம், ஸகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றது. இரவு சந்திர தரிசனத்திற்குப் பிறகு வந்திருந்த பக்தகோடிகளுக்கு பிரஸாதம் வழங்கப்பட்டது. அன்று திருச்சி, சுப்பய்யர் ஸ்டோர் ஸ்ரீ M. S. வெங்கட்ராமன் அவர்களும், துறையூர், டாக்டர் V. கருணாநிதி (AMC Ltd.) அவர்கள் சார்பிலும் ஸத்யநாராயண பூஜை செய்யப்பட்டது.

ஸ்ரீ ஆவுடையம்மாள் ஞானப் பாடல்கள்

விளக்கவுரை :

(நாகஸுந்தரம் S/o அருட்சக்தி நாகராஜன், சென்னை.)

முன்னுரை

'ஸ்ரீ ஆவுடையம்மாள் ஞானப் பாடல்கள்' தொடரை தொடர்ந்து வரும் வாசகர்களுக்கு,

இந்தத் தொடரின் ஆரம்பத்திலிருந்து இருந்து வரும் எனது சில எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீ ஆவுடையம்மாள் நம்மாலும் நமது முன்னோர்களாலும் 'ஆவுடையக்கா' என்று அன்பாக அழைக்கப்பட்டு வருபவர். ஆனால் இவ்வளவு அன்பாக நம்மால் அழைக்கப்படும் அந்த பெண் ஞானி தனது வாழ்நாளில் சந்தித்த தொல்லைகள் எண்ணிலடங்கா. அவள் இளமையிலேயே தனது கணவரை இழந்துவிட்டதனாலும், அந்த காலக்கட்டத்தில், அந்த சூழ்நிலையில் ஞானமார்க்கத்திற்கு திரும்பியதாலும், சுற்றத்தார்களாலும், ஊர் ஜனங்களாலும் அந்த மஹானுக்கு பலவிதங்களில் இடையூறு ஏற்பட்டது. எல்லாருக்குமே வாழ்க்கையில் கஷ்டங்களும், இடையூறுகளும் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் அந்த கஷ்டங்களையும், இடையூறுகளையும் சில பெரியோர்கள் சமாளிப்பதோடு அல்லாமல் அதை தங்கள் லக்ஷியத்திற்கு ஸாதகமாகவும் ஆக்கிக்கொண்டு விடுகிறார்கள் அல்லவா? (அதாவது ஆவரண ரஹிதமாக இல்லாமல் ஆவரண ஹிதமாக). அப்படிப்பட்ட சிலரில் ஸ்ரீ ஆவுடையம்மாளும் ஒருவராக இருந்து அத்தகைய இடையூறுகள் வரும் சமயங்களிலும், மற்ற சமயங்களிலும் தன் குருநாதரின் சொற்படி ஆத்மாவிலேயே மனதை செலுத்தி, அந்த ஆத்மானுபூதியை பாடல்களாக பாடிவிட்டாள். இந்த பாடல்கள்

ஒவ்வொன்றும் இம்மாதிரி ஒவ்வொரு சமயங்களில் பாடப் பட்டது. அவர் வைராக்யம் மிகக்கொண்டு வேதாந்தத்தை நன்கு நடைமுறையில் அப்யஸித்ததனுலும், ஸத்குருவின் கடாக்ஷத்தினுலும் இந்த பாடல்களை எழுதியிருப்பதால் இதில் வேதாந்த பரிபாஷைகளும், அனுபூதி நிலையில் வெளிவரும் சொற்களும் நிரம்பி இருக்கின்றன. இதனுல் இந்த பாடல்களை படித்து முழுமையாக புரிந்து கொள்பவர்கள் கீழ்க்கண்ட மூன்று விதங்களில் இருக்கலாம்.

1. வேதாந்த பாடத்தை முழுமையாக, முறையாகப் பயின்று அனுபவ பூர்வமாக உணர்பவர்.
2. ஸத்குருவின் பரிபூரண கடாக்ஷம் ஸித்தித்தவர்.
3. முறையான உபாஸனையால் ஸ்வானுபூதிபெற்றவர்.

இவ்விதம் அந்த பாடல்களின் உயர்வு அமைந்துள்ளது.

இந்த பாடல்களின் சிறப்பை ஓரளவிற்காவது அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கருதி எனது குருநாதர் என்னை இந்த பாடல்களுக்கு விளக்கம் எழுதுமாறு பணித்தார்கள். நானும் அவர்களது ஆக்ஞையை ஆதாரமாகக் கொண்டு ஸத்குருவின் பரிபூரண ஆசியுடன் "கூட்டைக் கொண்டு வந்த" என்ற ஆனந்தபைரவி ராகப் பாடலுக்கு ஒரு விளக்கம் எழுதிக் காண்பித்தேன். அவர்கள் அதை படித்துப் பார்த்துவிட்டு இம்மாதிரி ஒவ்வொரு பாடலுக்கும் எழுதி "தத்தப்ரஸாதத்திற்கு" அனுப்பிவிடலாம் என்று கூறினுர்கள். அதன்படியே நானும் எழுதி வருகிறேன்.

நான் வேதாந்தத்தை முழுமையாக முறையாக பயின்றவன் அல்ல. நான் தற்கால விஞ்ஞான யுகத்தில் வாழும் மிகமிகச் சாதாரணமான ஓர் இளைஞன். இருந்தாலும் குருநாதரின் அனுக்ரஹ பலத்தினுலும், சாஸ்திரங்களின்மீது நான் வைத்துள்ள நம்பிக்கையினுலும்தான் இதை எழுதிக் கொண்டு வருகிறேன். இதை எழுதும்சாக்கில் அத்தகைய உயர்ந்த ஞான நூல்களில் கூறியுள்ள கருத்துக்களை அநுஸந்தானம் செய்ய எனக்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்தது என்ற மகிழ்ச்சியில்தான் நான் தொடர்ந்து இந்தப் பணியை செய்து வருகிறேன். ஸ்வானுபூதி பெற்ற மஹானின் பாடல்களை

எழுத கிடைத்த வாய்ப்பினால் ஏற்பட்ட மகிழ்ச்சியினாலும், ஆர்வத்தினாலும் இதை எழுதிவருகிறேனானாலும், எனது சாஸ்த்ர அறிவு குறைவினால் இதில் சாஸ்த்ரோக்தமான சில பிழைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். கருணையும், வாத்ஸல்யமும் நிறைந்தவர்களான பெரியோர்கள் இத்தகைய பிழைகளை தகுந்தபடி சுட்டிக்காட்டி திருத்தியோ அல்லது பொருட்படுத்தாமலோ இருப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

"பூமௌஸ்கலித பாதானாம் பூமிரேவாவலம்பனம்
தவயிஜாதா பராதானாம் த்வமேவ சரணம் சிவே"

என்றபடி பெரியோர்களின் உயரிய ஆசியினாலும், வழிகாட்டுதலினாலும் மேற்கொள்ளப்படும் செயல்கள், அவர்கள் எந்த உயர்ந்த நிலையை அடைந்தார்களோ அந்த நிலையை நாமும் அடைய உதவுவதாகத்தான் அமையும் என்றும் நான் தீர்மானமாகக் கருதுகிறேன். மேலும்,
"ஸ்ரீ ஆவுடையம்மாள் ஞானப்பாடல்கள்" தொடரின் வாசகர்களும், பெரியோர்களும் அவர்கள் இதைப்பற்றி கொண்டுள்ள கருத்துக்களை தயவுடன் தெரிவிப்பார்களாயின் அது சிறியோனான எனக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நல் விருப்பங்களை பூர்த்தி செய்விப்பவரும், வாதாபி இல்வலன் என்ற வெளிப் பெயர்களுடைய காமம், க்ரோதம் என்ற இரு அரக்கர்களை ஜீரணித்த அகஸ்தியரால் உபாஸிக்கப் பட்ட வித்தையில் உறைபவரும், காமனைப்போல தானாகவே வலிய வந்து ஆட்கொள்பவரும், காம என்ற பதத்தின் அக்ஷர ஸங்க்யையைக்கொண்ட மந்த்ரத்திற்கு மூலமானவரும், சிஷ்யர்களுடைய மோக்ஷ இச்சையைப் பூர்த்தி செய்விப்பதில் காமதேனுவைப் போன்றவரும், ஸாமம் முதலான வேதங்களால் போற்றப்படுபவரும், எனது சிரஸில் 1000 இதழ்களின் மத்தியில் அகதாஸனத்தில் ஒளியுடன் விளங்கிக்கொண்டிருப்பவருமான ஸ்ரீ ஸத்குருநாதரை பணிந்து வணங்கி இந்த உயரிய செயலை தொடர்ந்து செய்விக்குமாறு செய்ய மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

10-ம் பாடலின் விளக்கம் அடுத்த இதழில். (தொடரும்)

1992 செப்டம்பர் மாதத்திய தேவீமான அஷ்டாங்கம்

கணித்தவர் S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

(1) खं ஸதாசிவ தத்வயுகம் (2) षं த்வக்தத்வ பரிவ்ருத்தி (3) ष्ं உபஸ்ததத்வ வருஷம்

(4) औं அங்கதாகலாமாஸம் 7உ முடிய மேல் अं பூர்ணாகலாமாஸம்

ஆங்கிரஸ ஸ்ரீ ஆவணி மாதம் 17உ முதல் புரட்டாசி மாதம் 15உ முடிய

தேதி	கிழமை	(5) தத்துவ தினம்		(6) தினநித்யா		(7) வாஸரம்		(8) உதயகடிகை
1	செவ்	वं	ரஸ	ऐं	விஜயா	कं	ஆனந்தானந்தநாத	ए
2	புதன்	शं	கந்த	ओं	ஸர்வமங்களா	चं	ஞானானந்தநாத	च
3	வியா	षं	ஆகாச	औं	ஜ்வாலாமாலினீ	टं	ஸத்யானந்தநாத	त
4	வெள்ளி	सं	வாயு	अं	சித்ரா (பௌர்)	तं	பூர்ணானந்தநாத	य
5	சனி	हं	வஹ்நி	अं	சித்ரா (க்ரு-ப்ரத)	पं	ஸ்வபாவானந்தநாத	अ
6	ஞாயிறு	ळं	ஜல	औं	ஜ்வாலாமாலினீ	यं	ப்ரதிபாநந்தநாத	ए
7	திங்கள்	क्षं	பிருத்வி	ओं	ஸர்வமங்களா	षं	ஸுபகானந்தநாத	च
8	செவ்	अं	சிவ	ऐं	விஜயா	शं	ப்ரகாசானந்தநாத	त
9	புதன்	कं	சக்தி	एं	நீலபதாகா	ळं	விமர்சாநந்தநாத	य
10	வியா	खं	ஸதாசிவ	ॡं	நித்யா	कं	ஆனந்தானந்தநாத	अ
11	வெள்ளி	गं	ஈச்வர	ऌं	குலஸுந்தரீ	चं	ஞானாநந்தநாத	ए
12	சனி	घं	சுத்தவித்யா	ॠं	த்வரிதா	टं	ஸத்யானந்தநாத	च
13	ஞாயிறு	ङं	மாயா	ऋं	சிவதூதீ	तं	பூர்ணானந்தநாத	त
14	திங்கள்	चं	கலா	ऊं	மஹாவஜ்ரேச்வரீ	पं	ஸ்வபாவாநந்தநாத	य

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப்பாடல்கள்

(விளக்கவுரை : நாகஸுந்தரம்
S/o அருட்சக்தி நாகராஜன், புது டில்லி)

பாடல் – 10

(ராகம் — தன்யாஸி)

பல்லவி

அஞ்ஞானிகளுக் கறியக்கூடாது ஆத்மஞானி ஹ்ருதயம்
கண்டுபிடிக்க வேணுமானால் (அஞ்)

அனுபல்லவி

ஹம்ஸ பக்ஷியின் செகிமை காகமெந்த
பாடுபட்டாலும் தெரியுமோ அதற்கு
துவம்ஸம் பண்ணும் லிங்கதேஹம்
துக்க பிரதீதியற்ற விஞ்ஞானிகள் செகிமை (அஞ்)

சரணம்

1 ஜாதி குதிரையின் குணத்தை வெகுவியாதி
பிடித்த கிழக்கழுதை யறியுமோ
மூடிக் கிடக்கும் குடத்துள்ளே வெண்கலத்து
பிரதீதி தெரியுமோ அதற்கு (அஞ்)

2 கோட்டான் ஸமூகமெல்லாம் கூடி
மார்த்தாண்ட ஸ்வரூபத்தின் மஹிமை அறியுமோ
கூத்தாடி கையில் குரங்குபோல் தேட்டசளி
அவித்தைக்கு வசப்பட்டு கிடக்கும் (அஞ்)

3 உள்ளே ஒட்டையான மூங்கிலுயர்ந்த
சந்தனக்கட்டை மணத்தை யறியுமோ
கள்ள மனமுடைய மூடருக்கு காமாதி
ரஸிகரான [illegible] (அஞ்)

4 அகர்த்தாவாக தன்னை பார்க்கும்
அகில பிரபஞ்ச வியாபாரமற்று
ஜகத்தில் கண்டதெல்லாம் தீர்த்து
ஸ்ரீ வெங்கடேசுவரர் கிருபையினால் (அல்லாது) (அஞ்)

அஞ்ஞானிகளினால் ஆத்ம ஞானியின் ஹ்ருதயத்தை அறிந்துகொள்ள முடியாது என்பதை ஸ்ரீ ஆவுடையம்மாள் இந்த பாடலில் பலவிதமான உதாரணங்களுடன் அழகாக விளக்குகின்றாள். அப்படி அறிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு என்ன வழி என்பதையும் இந்தப் பாடல் மூலம் விளக்குகின்றாள்.

இனம் இனத்தைச் சேரும் என்பது பழமொழி. இங்கு இரண்டு இனங்கள். ஒன்று ஆத்மஞானிகள். இரண்டாவது அஞ்ஞானிகள். வெளிப்பார்வைக்கு இருவரும் ஒன்றுபோல் தென்படலாம். ஒரே இனம்போன்று தோன்றலாம். ஆனால் ஒருவர் (ஆத்மஞானி) அவித்யையை தன் வசம் வைத்திருப்பவர். மற்றவரோ அவித்யைக்கு வசப்பட்டவர் (அஞ்ஞானி). கூத்தாடியின் கையில் எப்படி குரங்கு வசப்பட்டு அவன் ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடுகின்றதோ .அப்படி அஞ்ஞானிகள் அவித்தைக்கு வசப்பட்டு அங்கும் இங்கும் குதிக்கின்றார்கள் என்று கூறுகிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

ஆத்மஞானிகள் தனதான்ம ஸ்வரூபத்தை அறிந்து. உணர்ந்து அந்த த்யானத்திலேயே அதனோடு ஒன்றி இருக்கின்றார்கள். பாஞ்சபௌதீகமான உடலிலிருந்து பற்றை விலக்கி தங்கள் மனதை அவர்கள் எப்போதும் ஸ்வரூபநாட்டத்திலேயே செலுத்தியிருக்கின்றார்கள். புறப்பார்வைக்கு அவர்கள் கர்மா செய்வதுபோல் தோன்றினாலும் அவ்விதம் ஸ்வரூபத்தில் ப்ரக்ஞை உள்ள ஞானிகள் கர்மா செய்யாதவர்களே.

1. துர்வாஸ மஹரிஷி கோபிகள் தந்த அனைத்து உணவு வகைகளையும் உண்டுவிட்டு 'நான் நித்ய உபவாஸி' என்று அவர்களிடம் கூற, அதை யமுனா நதியும் ஒப்புக் கொண்டாள்.

2. ஜடபாதர் என்ற ஆத்மஞானி ரஹுகணன் என்ற அரசனின் பல்லக்கை சுமந்து சென்று கொண்டிருந்தபோது கீழே ஊர்ந்து சென்ற சிறிய ஜந்துக்களை மிதிக்காமல் தாண்டி செல்ல பல்லக்கு ஆடியது. அரசன் கோபங்கொண்டு இவரிடம் (இவர் ஆத்மஞானியென அறிந்துகொள்ளாமல்) 'பல்லக்கு சுமந்து களைத்துப் போய்விட்டாயோ' என்று அதட்டினான். அதற்கு ஜடபரதர், "பல்லக்கு சுமப்பவருக் கல்லவோ களைப்பு ஏற்படும்? 'நான்' ஆகிய ஆத்மா எதையும் சுமக்கவில்லை" என்று பதிலளித்தார். பின்பு அரசன் அவரை அறிந்து வணங்கி பலவிதமான உபதேசங்களை அவரிடம் பெற்றான்.

3. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் அருளிய ஸ்ரீ பாஸ்கரராயர் என்ற மஹான் ஒருநாள் இல்லத்தில் திண்ணையில் காலை நீட்டியவாறு தனது சிஷ்யர்களின் கேள்விகளுக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது தெருவில் ஒரு ஸன்யாஸி கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தார். ஸ்ரீ பாஸ்கரராயர் தினமும் அவர் அவ்வழியே செல்வது வழக்கம். க்ருஹஸ்த தர்மப்படி எழுந்திருந்து தன்னை வணங்கவில்லை என்று கருதி அந்த ஸந்யாஸி இவர் கோவிலுக்கு வந்த ஸமயம் இவரைப் பலவாறாகப் பேசினார். அப்போது ஸ்ரீ பாஸ்கரராயர் தான் க்ருஹஸ்த தர்மப்படி அவரை வணங்கியிருப்பின் அவர் தலை சுக்கல் நூறாக வெடித்திருக்கும் என்று கூறி அதை நிருபிக்கும் முகமாக அந்த ஸன்யாஸியின் காஷாய வஸ்திரத்தையும், தண்டு, கமண்டலங்களையும் வைத்து அதை வணங்கினார். அக்கணமே அவை சுக்கல் நூறாகச் சிதறின. இதைக் கண்டபின் அந்த ஸந்யாஸி இவரின் மஹத்துவத்தை உணர்ந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்குப்பின் ஸ்ரீ பாஸ்கரராயர் அந்த ஸந்யாஸி தெருவில் வரும்பொழுது திண்ணையில் இருப்பதில்லையாம்!

இவ்வாறு "ஆத்மஞானிகள் எப்போதும் ப்ரும்ம பாவனையில் இருப்பதால் அவர்களின் வெளிச் செயல்களை வைத்து எடைபோட முடியாது" என்பதற்கு பல்வேறு எடுத்துக்காட்டு நிகழ்ச்சிகள் உள்ளன.

பாடலின் உவமான விள்க்க அட்டவணை

சரணம் எண்	விளக்கம்		ஹ்ருதயம்
அனுபல்லவி	ஹம்ஸபக்ஷியின் கதி	மஹாவாக்யானு ஸந்தானம்	ஆத்மஞானி
	காகத்தின் பாடு	அவஸ்தைகள்	அஞ்ஞானி
	துவம்ஸம் பண்ணும் லிங்க தேஹம்	தேஹாபிமானம்	அஞ்ஞானி
	துக்கப் பிரதீதியற்ற	துன்பக் கலப்பற்றது	ஆத்மஞானி
1.	ஜாதிக் குதிரையின் குணம்	ஆத்ம குணங்களோடு கூடியது	ஆத்மஞானி
	வெகு வ்யாதி பிடித்த கிழக் கழுதை	வெகு காலமாக பவரோகத்தினால் பிடிக்கப்பட்ட	அஞ்ஞானி
	மூடிக்கிடக்கும் குடம்	ஸ்வரூப மறதியோடு கூடிய	அஞ்ஞானி
	வெண்கலத்து பிரதீதி	சித்ஸ்வரூப பிரகாசத்தோடு கூடிய	ஆத்மஞானி
2.	கோட்டான் ஸமூஹம்	அவித்யா வ்ருத்திகளோடு கூடிய	அஞ்ஞானி
	மார்த்தாண்ட ஸ்வரூபத்தின் மஹிமை	அகண்டாகார வ்ருத்தி ஞானமுடைய	ஆத்மஞானி
3.	உள்ளே ஒட்டையான மூங்கில்	பேத புத்தியோடு கூடிய	அஞ்ஞானி
	உயர்ந்த சந்தனக் கட்டை மணம்	நிர்விகாரமான ஆத்ம ஸ்வரூப த்யானத்தினால் பூரிப்படைந்த	ஆத்மஞானி

"ஆத்ம ஞானிகளை உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு (ஸ்ரீ வெங்கடேசுவர) ஸத்குருவின் க்ருபை வேண்டும்" என்று கூறி பாடலை நிறைவு செய்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள்.

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

(விளக்கவுரை : நாகஸுந்தரம்
S/o அருட்சக்தி நாகராஜன், புது டில்லி)

பாடல் 11] [ராகம் : மோஹனம்

பல்லவி

பிரமையை தூரவிட்டு விடடா — பிரம்ம ஸ்வரூபமதாகி இருடா

அனுபல்லவி

சுமையேன் சுமந்து கொண்டு உமையா பூதம்போல் ஏண்டா
ஏண்டா ஏண்டா அலைந்து சாகிறாய். (பிரமையை)

சரணம்

1 அவித்யை என்னும் பெண்ணை வேட்டாயே
ஆத்ம ஸ்வரூபத்தை அறியாது கெட்டாயே
பவத்தில் முழுகி மிஞ்சி பட்டாயே
பஞ்சகோசமும் நானென்று கெட்டாயே
ஜகத்தில் கர்மவேரை நட்டாயே
பகுவான சாஸ்திரத்தை கேட்டாயே

மஹாத்துக்கள் சரணத்தை ஸ்துதித்து நித்தியமாக பணிவாய்
பணிவாய் பணிவாய் சொன்னேன் சொன்னேன் (பிரமையை)

2 ஜீவத்துவம் உனக்குத்தான் ஏதடா
சுத்த சைதன்ய வஸ்த்து நீதானடா
நாமத்தை முதலாக்கித் தள்ளடா
நல்ல புத்தியை பரிபாலனம் பண்ணடா
பரமாத்மா வென்பதும் பொய்யோடா
இத்தருணமே விசாரித்துப் பாரடா

எள்மாத்திரமானாலும் உன்னைத்தவிர வேறே காணேன்
காணேன் காணேன் சொன்னேன் சொன்னேன் (பிரமையை)

3 தன்னை விசாரித்து பார்த்தாயோ
உன்தன்னிலே தன்னை யறிந்தாயோ
உன் கர்மம் இன்னதென்று அறிந்தாயோ
நித்ய கர்மானுஷ்டானத்தை செய்தாயோ

பெருமை சிறுமைவிட்டு பொறுமை பூஷணத்தை அணிவாய்
அணிவாய் அணிவாய் சொன்னேன் சொன்னேன் (பிரமையை)

4 ஆசையால் கெட்டு அலைந்தாயே
உன் அகங்காரத்தால் பிடிபட்டு நொந்தாயே
ஆவரணத்தை பூட்டிக் கொண்டாயே
அவிவேகந்தால் கோபமது கொண்டாயே
மோகத்துடன் கூடி கெட்டாயே
நிலையாத ஸம்ஸாரத்துள் பட்டாயே

காமக்ரோதத்தாலே அலைந்து நித்தியமாகக் கெட்டாய்
கெட்டாய் கெட்டாய் சொன்னேன் சொன்னேன் (பிரமையை)

5 இதம் சொன்னேன் காதில் பட்டதோ
எளிதான வழியில் விட்டதோ
மதபேதங்க ளெல்லாம் அற்றதோ
மகத்தான விஞ்ஞான வன்னி சுட்டதோ
அஹம் பிரமை என்பதும் அற்றதோ
இந்த ஆசிரம தர்மங்கள் விட்டதோ

ஸ்வீயகுரு ஸ்ரீகுரு வெங்கடேசுவரர்
க்ருபையால் ஆனேன்
ஆனேன் ஆனேன் சொன்னேன் சொன்னேன் (பிரமையை)

ஆய்குடி ஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகள் இந்த புத்தகத்தின் முன்னுரையில், "ஆனந்தானுபவத்தின் மேலீட்டில் ஸ்ரீ ஆவுடையம்மாள் தயை மேற்கொண்டு **ஸமஸ்த ஜனங்களும்** ஆத்மஞானமடைந்து ஜீவன் முக்தர்களாக வேண்டி பாடியுள்ள பாடல்கள்" என்று குறிப்பிடுகின்றார்.

அவ்வாறே ஸ்ரீ ஆவுடையம்மாள் இந்தப் பாடலில் ஸமஸ்த ஜீவர்களுக்கும் ஞானோபதேசம் செய்கிறாள்.

'நான் ஸ்ரீ குரு (வெங்கடேசுவரர்) க்ருபையால் பிரம்ம ஸ்வரூபமானேன். அதுபோல் நீங்களும் பிரமையை தூரவிட்டு, மஹாத்துக்களை பணிந்து பிரம்ம ஸ்வரூபமாகி இருங்கள்'— இவ்வாறு ஆணையிடுகிறார் பாடலாசிரியர்.

எதையும் மூன்று முறை சொன்னால் அது ஸத்திய வசனமாகும். மேலும் தீர்மானமான ஓர் கருத்தை பிறர் மனதில் நன்கு பதிய வைக்க இரண்டு மூன்று தடவை சொல்வது வழக்கம். அவ்வாறு ஸ்ரீ ஆவுடையம்மாளும், "பிரம்மஸ்வரூபமாகி இருங்கள்" என்ற தீர்மானமான கருத்தை சொல்வதற்காக மூன்று முறை கூறுகின்றாள்.

"நான் ஜீவன்" என்ற பிரமையை தூர விட்டுவிட்டால் சரீரச் சுமை கிடையாது. அந்த பிரமை போவதற்கு "நான் பிரம்மம்" என்பது அனுபூதியால் உணரப்பட வேண்டும்.

அதற்கு என்ன செய்வது ?

மஹாத்துக்கள் சரணத்தை ஸ்துதித்து எப்போதும் அவர்களைப் பணிவதுதான் அதற்கு ஒரே வழி.

இதுதான் எளிதான வழி.

"எளிதான இந்த வழியை இதமாக நான் கூறுகிறேனே ! ஏ ஜீவனே ! உன் காதில் இது பட்டதோ !"

"'உன்வழி, என்வழி' என்பதெல்லாம் அற்றதோ ! தனித்த குருவழி என்று நான் கூறும் மகத்தான அறிவுச்சுடர் (விஞ்ஞான வன்னி) சுட்டதோ ! சரீர பிரமையும், அதன் தொடர்பான தர்மங்களும் விட்டதோ !"

"ஸ்ரீ (வெங்கடேசுவர) குருவின் பரிபூர்ண க்ருபையால் நான் பிரம்ம ஸ்வரூபமானேன் !"

"ஆனால் நீ ?

அவித்தையில் ஆழ்ந்த ஜீவனே ! உன்னைப்பற்றிக் கூறுகிறேன், கேள் :"

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

(விளக்கவுரை : நாகஸுந்தரம்

S/o அருட்சக்தி நாகராஜன், புது டில்லி)

(பாடல் 11இன் தொடர்ச்சி)

ஓ ஜீவனே! நீ அவித்யை என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டிருக்கிறாய். அதனால் உனது ஆன்ம ஸ்வரூபத்தை நீ அறிந்துகொள்ளவில்லை. நீ பவ ஸாகரத்தில் மூழ்கிவிட்டாய். "பஞ்ச கோசங்களும் – நான்" என்ற ப்ரமையில் நீ ஆழ்ந்து இருக்கிறாய். பசுவான சாஸ்திரத்தைக் கேட்டு ஜகத்தில் கர்ம வேரை நடுகின்றாய். நீ கரையேற வேண்டுமெனில் மஹத்துக்கள் சரணத்தை நித்தியமாக பணிவாயாக! இது ஒன்றுதான் அதற்கு வழி! மஹத்துக்களான ஸத்குருநாதர்கள் இவ்வாறு உனக்கு உபதேசம் செய்வார்கள். எப்படியெனில் —

"ஜீவத்துவம் உனக்குத்தான் ஏதடா
சுத்த சைதன்ய வஸ்து நீதானடா
நாமத்தை முதலாக்கி தள்ளடா
நல்ல புத்தியை பரிபாலனம் பண்ணடா.
பரமாத்மா வென்பதும் பொய்யோடா
இத்தருணமே விசாரித்துப் பாரடா
என் மாத்திரமானாலும் உன்னைத்தவிர
வேறே காணேன்!"

இவ்விதமெல்லாம் உபதேசம் செய்யும் ஸ்ரீ ஸத்குருநாதரை ஏ! ஜீவனே! நன்கு பணிவாயாக. இப்படிப்பட்ட எளிதான வழியை உனக்கு இதமாக நான் கூறுகிறேன்! இது உன் காதில் விழுகின்றதோ? ஸ்ரீ ஸத்குருநாதர் மேலும் உபதேசம் செய்கிறார்.

"தன்னை விசாரித்துப் பார்த்தாயோ!
உன்தன்னிலே தன்னை யறிந்தாயோ
உன்கர்மம் இன்னதென்று அறிந்தாயோ
நித்ய கர்மானுஷ்டானத்தை செய்தாயோ
பெருமை சிறுமைவிட்டு பொறுமை
பூஷணத்தை அணிவாய்.

இந்த ஸத்குருநாதர் க்ருபை பெறுவதற்கு முன்பு நீ எப்படி இருந்தாய் தெரியுமா?

" ஆசையால் கெட்டு அலைந்தாயே !
உன் அஹங்காரத்தால் பிடிபட்டு நொந்தாயே
ஆவரணத்தை பூட்டிக் கொண்டாயே
அவிவேகத்தால் கோபமது கொண்டாயே
மோகத்துடன் கூடி கெட்டாயே
நிலையாத ஸம்ஸாரத்துடன் பட்டாயே
காமக்ரோதத்தாலே அலைந்து நித்யமாக கெட்டாய். "

ஸ்ரீ ஸத்குருவின் க்ருபை பெற்றவுடன்தான் நீ ப்ரம்ம ஸ்வரூபமாக முடியும். அவரின் க்ருபையைப் பெற வழி அவரது பாதங்களை நித்யமாக பணிவதுதான். அவரது ஸ்ரீ பாதுகைகள் நமது சிரஸிலே ஆயிரம் இதழ் கமலத்தின் நடுவே அகதாயனத்திலே ஒளியுடன் விளங்குகின்றன. அதன் காந்தியினாலே அவித்யை யாகிற இருள் முற்றிலும் அகன்றுவிடுகின்றது. சுத்த சைதன்ய வஸ்துவே நாம் என்ற திடபுத்தி ஏற்படுகின்றது. இந்த திட புத்திதான் நல்லபுத்தி. இந்த நல்ல புத்தியை நாம் எப்போதும் பரிபாலனம் பண்ண வேண்டும் என்கிறாள் ஸ்ரீ ஆவுடையம்மாள். திடநிச்சயம் ஏற்பட்டால் மட்டும் போதாது. அதை எப்போதும் பரிபாலனம் செய்ய வேண்டும். (அதாவது ஸாதனை)

இவ்வாறு கூறும் ஸ்ரீ ஆவுடையம்மாள் ஸ்ரீ குரு க்ருபையினால் எனக்குக் கிடைத்த ஞானத்தை (திடபுத்தியை) நான் எப்போதும் பரிபாலனம் செய்து ப்ரஹ்ம ஸ்வரூபமாய் இருக்கிறேன். அவ்விதம் நீங்களும் நல்ல புத்தியை பரிபாலனம் பண்ணி ப்ரம்மஸ்வரூபமாக இருங்கள்" என்று கூறி இந்தப் பாடலை நிறைவு செய்கிறார்.

இனி பாடல் 12ஐ அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

சுமார் 24 சதுர அடி கொண்டது. கொடி மரம் 25 அடி உயரமுள்ளது. ஒரு நாளில் 3 முறைக் கொடியை மாற்றுகிறார்கள்.

இக்கோவில் மிக அழகு வாய்ந்தது. கோபுரம் வட இந்தியப் பாணியில் உள்ளது. கோவிலை அடையும் தெருக்கள் குறுகலாகக் காசி தெருக்கள் போல உள்ளன. காசி போலவே நிறையப் பசுக்கள் சுப்பிரமாக உலவு கின்றன. கடைகள் ஏராளம். கட்டித்தயிர், சுத்தமான பசும்பால், கெட்டி வெண்ணை முதலியவைகள் இங்கு பிரசித்தம். இக்கோவிலைக் கட்டிய காலம் 13ல் இருந்து 16ம் நூற்றாண்டுக்குள் எனக் கணிக்கப்படுகிறது.

இரண்டாம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள எல்லாச் சந்நிதிகளுக்கு முன்பும் கூட்டம் கூடுகிறது. ஆனால் த்வாரகாதிசன் கோவிலில் மட்டும் ப்ரத்யேகமான கூட்டம். 24 மணி நேரமும் ஆங்காங்குள்ள மண்டபங்களில் ஸ்திரீகள் தனியாக, ஆடவர்கள் தனியாக நாம ஸங்கீர்த்தனம் செய்தவண்ணமிருக்கின்றனர்!

(தொடரும்)

ஸ்ரீ ஆவுடையம்மாள்

ஞானப் பாடல்கள்

(விளக்கவுரை : நாகஸுந்தரம்

S/o அருட்சக்தி நாகராஜன், புது டில்லி)

(முடிவுரை)

பல்லவி

பாடல் 12] [ராகம் : மோஹனம்

ஞானநிஷ்டாள் மகிமையுரைக்க
நாவிலடங்காது (ஞான)

அனுபல்லவி

ஆனாலவர் குணம் நானுமறிந்ததை
அன்பாக சொல்லுகிறேன் மிகவும் (ஞான)

சரணம்

ஆதியில்லாத சரீரத்தைக் கண்டறிந்து பிரமியார்கள்
பிராரப்த
கர்மத்தைக் கண்டு மனதிலே பார்த்து மகிழ்ந்து கொண்டு
இதிலாஸக்தி வைத்தால் அனர்த்தம் வருமென்றறிந்து
மஹாத்மாக்களாய்
பித்தரைப் போலவே ஜகத்திலிருந்தவர்கள்
பிரம்மவிசாரம் செய்வார் மிகவும் (ஞான) 1

தாமரையிலே நீர்போலே ஜகமெலாம் தான்வேருகி
இருப்பார்கள்
பூமியிலுள்ள புளியுமோடும் போலவே போகம்
புசித்திருப்பார்கள்
நாமந்த பரபிரம்மாகமஸ்மி நாமென்று
நன்ருயிருந்துகொண்டு
பாமரரை நல்லவார்த்தை சொல்லி பரிசுத்த மாக்கி
வைப்பார் மிகவும் (ஞான) 2

சித்துக்குண்டோயிந்த தேகாதி போகங்கள்
சற்றும் தானில்லை என்பார்கள்
கர்த்தாவாய் போக்தாவாயுள்ள ஜனங்களைக்
கண்டே நகைத்திருப்பார்கள்
கர்த்தரைப் போலவே ஜகத்திலிருந்து அவர்கள்
பேதித்திருப்பார்கள்
பக்தாளே கேளுங்கள் பரமபுருஷர்களுடைய
பாக்கியத்தை என்ன சொல்வேன் (ஞான) 3

ஸ்தாணு புருஷனைப் போலே ஜகமெல்லாம்
தான் பார்த்திருப்பார்கள்
வீணுக்கன்றோ ஜீவனுயிருந்தோ மென்று
மெத்த நகைத்திருப்பார்கள்
வேணத்தக்க கர்மம் வேதங்கள் சொன்னாலும்
மெய்யாக உண்மை கொள்ளார்கள்
சேஷித்த உலகமெலாம் நம்முடைய சித்விலாஸ
மென்பார்கள் மிகவும் (ஞான) 4

கந்தையும் பீதாம்பரமும் ஸமனுகக்கண்டே
மகிழ்ந்திருப்பார்கள்
தந்தையும் தாயும் போலே பக்ஷமாய் பிறரையும்
பார்த்திருப்பார்கள்
வந்தியா புத்திரனுக ஜகமெலாம் வான்மயமாக
இருப்பார்கள்
முன்னிருந்தபடி யிருப்போமென்றும் முக்தியில்லை
என்பார்கள் மிகவும் (ஞான) 5

அந்தியில்லை ஸந்தியில்லை யவர்களுக்கு
அனுதினமும் வெளிச்சம்
சிந்தையில்லை ஸ்நானமில்லை யவர்களுக்கு
'சித்'தாய் நிறைந்திருப்பார்கள்
சிந்தையிலே பிரம்மாகமஸ்மி நாமென்று தெரிந்தும்
ஸ்துதிசெய்வார்கள்
சிந்தனையில்லை யவர்களுக்கு ஒரு வஸ்து
நிச்சயமாயிருக்கும் மிகவும் (ஞான) 6

அவர்கள் உதரத்தில் நெல்லியிலையளவு
அன்னங்களிட்டால்
பவரோகமற்று இனிபாரில் பிறவார்கள் இது ஸத்தியம்
உபநிஷத்துக்களும் வேதங்கள் நாலும்
உரைக்கும் அவர் மஹிமை
ஜீவன்முக்தாளுடைய தீர்ந்தநிலை சொல்ல
ஆதிசேஷனுக்கும் முடியாது மிகவும் (ஞான) 7

அவர்களிருக்கும் ஸ்தலங்கள் அறுபத்தோரு கோடி
தீர்த்தம்
அவர்களிலிருக்கும் ஸ்தலங்கள் ஆதி காசி கைலாஸம்
அவர்களிருக்கும் ஸ்தலங்கள் தில்லையம்பலம் மாயூரம்
அவர்களிருக்கும் ஸ்தலங்களுக் கொப்பு யாராலும்
சொல்லப் போமோ மிகவும் (ஞான) 8

"இதி சிவம்"

கடின பதமில்லாத பாடல் — ஞான நிஷ்டர்களின் நிலை — எனவே இதற்கு இதுவே விளக்கமாகும். இத்துடன் ஸ்ரீ ஆவுடையம்மாள் ஞானப் பாடல்கள் — என்கிற கடலிலிருந்து சில திவலைகளை மட்டும் ருசித்தோம். சிறியேனின் கருத்துக்களில் குற்றமிருப்பின் பெரியோர் பொறுப்பது கடனே!

வெல்க ஸத்குரு புகழ்!!

03/2000 IJAL51 13062000 0000BSP BOM AGENT TOTAL	+014347071	30998	INR	28.890,00-		
03/2000 IJAL51 13062000 0000 BSP BOM DIFFERENCE NETT	+014347071	30998	INR	22.963,55		
03/2000 IJAL56 -000273827 0000CYCLE	+014347071	83028	INR	31.985,00-		
03/2000 IJAL57 -000273487 0000CYCLE 0621	+014347071	50028	INR	28.890,00		
03/2000 QMBSRE			INR	31.985,00		
03/2000 RP1406 FROM 62997			INR	22.963,55-	22.963,55-	22.963,55-
03/2000 IJAL56 20062000 0000RESCUE DISCOUNT FOR 14347071	+014347071	83028	INR	1.224,00		
03/2000 IJAL57 21062000 0000RESCUE DISCOUNT FOR 14347071	+014347071	50028	INR	31,00-	1.193,00	1.193,00
03/2000 IJAL67 05072000 0000RESCUE DISCOUNT FOR 14347082	+014347082	50028	INR	31,00-	31,00-	31,00-